விலை ரூபா: 6.00 பக்கங்கள் :-பத்து Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி
# VALAMPURI

ஆசியா கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது
ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT

சங்கு 04 வள்ளுவர் ஆண்டு 2034 தை 14 செவ்வாய்க்கிழமை (28.01.2003) தொலைபேசி- 2223378 ஒலி 40

# உதயன் பத்திரிகையில் வெளிவந்த "ராக்கிங்" செய்தி ஆதாரமற்றது!

## விசாரணைகளின் பின்னர் புலிகள் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தில் ராக்கிங் இடம் பெற்றதாக யாழ்ப்பாணப் பிராந்தியப் பத்திரிகையொன்று வெளியிட்ட செய்தி குறித்து தமிழீழ விடுதலைப் புலிகளின் யாழ்.மாவட்ட அரசியல்துறை அறிக்கை ஒன்றை நேற்று வெளியிட்டுள்ளது.

"எம் இனத்தை பிரித்தாளும் சக்திகளுக்கு இடம் கொடுக்காது ஒன்றிணைந்து செயற்படுவோம்" என்ற தலையங்கத்தில் வெளியிடப்பட்ட அவ்வறிக்கை முழுமையாக அப்படியே இங்கு தரப்படுகின்றது. பகிடிவதை பற்றிய செய்திகள் வெளிவரும் இவ்வேளையில் 16.01.2003 அன்று உதயன் பத்திரிகையில் யாழ். பல்கலைக்கழக மாணவர் சமூகம் தொடர்பாக வெளிவந்த வாசகர் கடிதத்தை தொடர்ந்து பல்கலைக் கழக மாணவர்களுக்கும் குறித்த பத்திரிகைக்குமிடையே முரண்பாடுகளும் இடைவெளிகளும் ஏற்பட்டு வருகின்றது.இவ்விடயங்கள் தொடர்பாக நாம் சிலவற்றைத் தெளிவுபடுத்த விரும்புகின்றோம்.

மேற்படி வாசகர் கடிதத்தில் குறிப்பிட்டது போன்று யாழ்.மாவட்ட அரசியல் துறைக்கு குறிப்பிட்ட கடிதத்தின் பிரதி இதுவரை கிடைக்கப்பெற

(10ம் பக்கம் பார்க்க)

## அனைத்துப் பீட மாணவர்களுக்கான பொதுக் கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக அனைத்துப் பீட மாணவர்களுக்குமான பொதுக் கூட்டம் ஒன்று இன்று செவ்வாய்க் கிழமை மதியம் 12மணிக்கு நடைபெறவுள்ளது.இதில் அனைத்துப் பீட மாணவர்களையும் தவறாது கலந்து கொள்ளுமாறு மாணவர் ஒன்றியச் செயலாளர் கேட்டுள்ளார். (ந-5)

**அன்பு வாசகர்களே**
நாளை உங்கள் வலம்புரியுடன் அழகிய கலண்டர். தவறாது கேட்டு வாங்குங்கள்.

## இனப்பிரச்சினைத் தீர்வில் காவல்துறை கட்டமைப்பு மாற்றி அமைக்கப்படும்

### அமைச்சர் பீரிஸ் தெரிவிப்பு

(நமது நிருபர்)

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்குமிடையே தற்போது நடை பெற்று வரும் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காணப்படும் போது நாட்டில் ஒரேயொரு இராணுவ அமைப்பே காணப் படும்,காவல்துறை மட்டும் வித்தியாசமான கட்டமைப்புடன் இயங்கும்.**

இவ்வாறு முப்படைத் தளபதிகள் கலந்து கொண்ட முக்கிய கூட்டம் ஒன்றில் கலந்து கொண்டு உரையாற்றிய அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நடை பெற்ற இக் கூட்டத்தில் அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ் படைத் தளபதிகள், உயர் அதிகாரிகள் மத்தியில் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;

இனப் பிரச்சினைக்குரிய தீர்வு அதிகாரப் பகிர்வு மூலமே முன்னெடுக்கப்படவுள்ளது.எனினும் எத்தகைய அதிகாரப்பகிர்வு மேற்கொள்ளப்படவுள்ளது என்பது பற்றி இன்னமும் தீர்மானிக்கப்படவில்லை.

அரசும்,விடுதலைப் புலிகளும் தறபோது மேற்கொண்டு வரும் சமாதானப் பேச்சுவார்த்தை மூலம் இறுதித

(10ம் பக்கம் பார்க்க)

## கண்காணிப்புக் குழுத் தலைவர் தமிழ்ச்செல்வனுடன் இன்று சந்திப்பு

(கிளிநொச்சி)

இலங்கை யுத்த நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் மேஜர் ஜெனரல் ரொன் பியூறுஹெவ்டே விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை இன்று சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்தவுள்ளார்.

இச்சந்திப்பு கிளிநொச்சியில் உள்ள விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் நடுவப் பணியகத்தில் இன்று காலை நடைபெறவுள்ளது.

யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ரொன்பியூறு ஹெவ்டே அடுத்தமாதம் முதல் மாற்றப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ள நிலையில் சு.ப.தமிழ்ச்செல்வனுடனான இன்றைய சந்திப்பு முக்கியத்துவம் பெறுவதாக அரசியல் அவதானிகள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

சு.ப.தமிழ்ச்செல்வனுடனான இச் சந்திப்பு யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத்தலைவரின் இறுதிச் சந்திப்பாக அமையுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (வ)

## பொலிஸார்–பொதுமக்கள் மட்டக்களப்பில் முறுகல்

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் பிள்ளையார் அடிப் பகுதியில் "வீரம் விளைநிலம் உங்களை வரவேற்கிறது" என்ற வாசகங்களுடன் விடுதலைப் புலிகள் சின்னமும், மாவீரர் சின்னமும் அடங்கிய புலிகளின் வரவேற்புப் பலகை அமைச்சர் மிலிந்த மொறகொடவின் உத்தரவையடுத்து நேற்றுப் பொலிஸாரினால் அகற்றப்பட்டது.இதனையடுதது பொலிஸாருக்கும் பொதுமக்களுக்குமிடையே முறுகல் நிலை ஏற்பட்டது.

இம்முறுகல் நிலையை அடுத்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு அறிவித்ததைத் தொடர்ந்து சம்பவம் நடைபெற்ற இடத்திற்கு விரைந்த கண்காணிப்புக் குழுவினர் இரு தரப்புடனும் சமரசம் பேசினர்.

மட்டக்களப்பு வாழைச்சேனை வீதியில் பிள்ளையார் அடிப்பகுதியில் அமைக்கப்பட்டிருந்த இப் பெயர் பலகையை அகற்றுவதற்கு அமைச்சர் மிலிந்த மொறகொடவின் கவனத்திற்குக் கொண்டு வந்த போது அவர் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழு மூலமாக அதனை அகற்றக் கோரிய போது அப் பெயர்ப் பலகைக்கும்

(10ம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் சமஷ்டியை ஏற்படுத்த சுவிற்சர்லாந்து உதவி செய்யும்

### அந்நாட்டு வெளியுறவு அமைச்சர் உறுதி

(கொழும்பு)

பொருத்தமான சமஷ்டி அரசியற் கட்டமைப்பு ஒன்றை இனங்கண்டு கொள்வதில் இலங்கைக்கு சுவிற்சர்லாந்து உதவி வருகிறது.நிலக் கண்ணிகளை அகற்றும் பணிகளில் பங்களிப்புச் செய்வதற்கும்,சமாதான நடவடிக்கைகளுக்கு அடிமட்டத்தில் இருந்து உதவிகளை வழங்குவதற்கும்,அதிகாரப் பரவலாக்கம் போன்ற விடயங்களில் ஒத்துழைப்பதற்கும் சுவிற்சர்லாந்து இணங்கியிருக்கிறது. இலங்கைக்கான இவ்வாண்டுக்குரிய இரு தரப்பு உதவித் தொகையை 7.5 மில்லியன் சுவிஸ் பிராங்குகள் மட்டத்திற்கு அதிகரித்துமிருக்கின்றது.

அமைச்சர் ஜீ.எல்.பீரிஸ் பேர்ண் நகரில் சுவிஸ் வெளியுறவு அமைச்சர் திருமதி மிச்சிலின் காமிறீயை சந்தித்து நடத்திய பேச்சுக்களின் போது மேற்படி தீர்மானங்கள் எட்டப்பட்டன.இலங்கையில் வீதி அபிவிருத்தி,தொலைத் தொடர்பு,மின்சாரம்,நீர்ப்பாசனம் ஆகிய துறைகளில்

(10ம் பக்கம் பார்க்க)

## தேர்தலை எந்நேரமும் சந்திக்க முஸ்லிம் காங்கிரஸ் தயார்!

### பதியுதீன் எம்.பி. வலம்புரிக்கு தெரிவிப்பு

(புத்தளம்)

மற்றொரு பொதுத் தேர்தல் எந்நேரம் வந்தாலும் அதனைச் சந்திப்பதற்கு அமைச்சர் ரவூப் ஹக்கீம் தலைமையிலான ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தயாராக இருப்பதாக வன்னி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் றிசார்த் பதியுதீன் நேற்று இரவு வலம்புரிக்குத் தெரிவித்தார்.

சமஷ்டி அமைப்பு முறைபற்றி வெளிநாடுகளில் ஆராய்ந்த பின்னர் நாடு திரும்பிய றிசார்த் பதியுதீன் மேலும் தெரிவித்திருப்பதாவது;

அரசாங்கக்கட்சி, எதிர்க்கட்சிப் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்று

(10ம் பக்கம் பார்க்க)

## புலிகள் சிறுவர்களைச் சேர்ப்பதை உடனடியாக தடுத்து நிறுத்துக!

### இராணுவத் தளபதிக்கு ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு)

விடுதலைப் புலிகள் தமது இயக்கத்தில் சிறுவர்களைப் பலவந்தமாக இணைத்துக் கொள்ளும் நடவடிககைகளை உடனடியாக தடுத்து நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா இராணுவத் தளபதி,பொலிஸ்மா அதிபர் ஆகியோருக்கு உத்தர விட்டுள்ளார்.

சிறுவர்களைக் கடத்திச் செல்வோரை சட்டத்தின் முன் நிறுத்துமாறும்,சிறுவர்களை இயக்கத்தில் சேர்த்துக் கொள்வதன் மூலம் விடுதலைப் புலிகள் அரசிடம் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மீறிவருவதாகவும் இராணுவத் தளபதி லயனல் பலகல்ல பொலிஸ்மா

(10ம் பக்கம் பார்க்க)

## முஸ்லிம் குடும்பப் பெண் வெட்டிக் கொலை

### மன்னாரில் பயங்கரம்

(மன்னார்)

மன்னார் புதுக்குடியிருப்புப் பகுதியில் இளம் முஸ்லிம் பெண் ஒருவர் மர்மமான முறையில் நேற்று நண்பகல் வெட்டிக் கொல்லப்பட்டுள்ளார்.

ஐந்து பிள்ளைகளின் தாய் ஒருவரே இவ்வாறு வெட்டிக் கொல்லப்பட்டவராவார்.

இக்கொலைபற்றி மேலும் தெரிய வருவதாவது;

(10ம் பக்கம் பார்க்க)

# சமாதானத்தைக் குழப்பவே பொ.ஐ.மு. பாடுபடுகிறது

## எதிர்த்தரப்பின் உள்ளக்கிடக்கையை அம்பலப்படுத்துகிறார் ஜோன் அமரதுங்க

(கொழும்பு)

**எதிர்வரும் மே மாதத்தில் பொதுத்தேர்தல் நடைபெறும் என பொதுஜனஐக்கிய முன்னணியின் பொதுச் செயலாளர் டி.எம். ஜெயரட்ண அறிவித்திருப்பது தற்போதைய சமாதான நடவடிக்கைகளைக் குழப்பும் நடவடிக்கைகளில் ஒன்றாகும்.**

இவ்வாறு உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் ஜோன்அமரதுங்க குற்றம் சாட்டியுள்ளார்.

திருகோணமலை நகர மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற அரசாங்கத்தின் 'சமாதான முன்னெடுப்புக்களும் மூன்றாம் கட்ட வேலைத்திட்டமும்' என்னும் தலைப்பிலான கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அமைச்சர் தொடர்ந்தும் உரையாற்றுகையில், ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகளைக் குழப்பி, பொதுத் தேர்தலில் பொதுஜனஐக்கிய முன்னணி வெற்றிபெற நினைத்தால் அவர்கள் அவமானப்பட வேண்டிய நிலை ஏற்படும்.

எதிர்வரும் ஜுன் மாதத்தில் இலங்கைக்கான உதவி வழங்கும் நாடுகளின்மாநாடு நடைபெறவுள்ளது. இந்த மாநாட்டில் கிடைக்கும் நிதியுதவிகள் மூலம் வடக்கு-கிழக்கில் பாதிக்கப்பட்ட பகுதிகளையும் புனரமைக்க முடியும்.

இந்த நிலையில் எதிர்வரும் மே மாதம் பொதுத் தேர்தல் நடைபெறும் என பொதுஜன ஐக்கிய முன்னணியின் செயலாளர் டி.எம். ஜெயரட்ண அறிவித்திருப்பது சமாதானத்தைக்குழப்பும் வகையிலானது.

கடந்த இரு தசாப்பதங்களாக தொடர்ந்து நடைபெற்ற யுத்தம் காரணமாக மக்களின் வாழ்வு சீரழிக்கப்பட்டதுடன், பொருளாதாரம் வீழ்ச்சி கண்டுள்ளது.

இந்த நிலையில் நிரந்தர சமாதானம் ஒன்றை ஏற்படுத்துவது அவசியமாகும். போர் ஒன்றை நடாத்துவதை விட சமாதானத்தை ஏற்படுத்துவதென்பது பெருங்காரியமாகும். இப்பணியிலேயே அரசு தற்போது தீவிரமாக ஈடுபட்டு வருகிறது என்றார்.

மேலும் கூறுகையில், இத்தகைய சமாதான நடவடிக்கைகளுக்கு விரோதமான செயல்களில் யாரும் ஈடுபடக் கூடாது. இவ்வாறான நடவடிக்கைகளில் ஈடுபடுவோர் யுத்த விரும்பிகளாகவே கணிக்கப்படுவர்.

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையே 5ஆவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறவுள்ளன. இதன் மூலம் இருதரப்புக்களினதும் சமாதான உறுதிநிலை தெளிவாகியுள்ளது எனவும் தெரிவித்தார். (உ-8)








இலங்கை போர்நிறுத்தக் குழுவின் தலைவர் ரொன் புறூவ் ஹெவ்டே மற்றும் உறுப்பினர்கள் நேற்று யாழ்.செயலகத்திற்கு விஜயம் செய்த போது பிடிக்கப்பட்ட படங்கள். *படங்கள: க.பவன்*

# சமாதான ஒப்பந்தம் விரைவில் ஏற்பட வாய்ப்பு உண்டு

## யாழ் வந்த ஹெவ்டே தெரிவிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவின் பணிகளும் ஏனைய பொதுப்பணிகளும் முன்னைய காலங்களை விட மிகவும் திருப்திகரமாக இருக்கின்றன. ஆயினும் நிலைமையில் இன்னமும் முன்னேற்றம் ஏற்பட வாய்ப்புகள் தென்படுகின்றன.

நேற்றைய தினம் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்திருந்த யுத்த நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் தலைவரான மேஜர் ஜெனரல் ரொண்ட் புறூவ் ஹெவ்டே பத்திரிகையாளர்களிடம் இவ்வாறு தெரிவித்தார்.

கண்காணிப்புக்குழுவின் தலைவர் நேற்றுக்காலை யாழ் மாவட்ட அரசாங்க அதிபருடனும் யாழ் மாவட்ட கண்காணிப்புக்குழுவினருடனும் சென்று கொழும்புத்துறை, குருநகர், நாவாந்துறை, பாஷையூர் மற்றும் முஸ்லிம் வட்டாரம் ஆகிய இடங்களின் நிலைகளை அவதானித்துள்ளதுடன்,


இப்பகுதிகளில், மீனவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும் அவர்களுக்கான அடிப்படைத் தேவைகள் பற்றியும் அறிந்து கொண்டார். அவர் மேலும் கூறுகையில்,

மீனவர்களின் மீன்பிடித் தொழிலை மேலும் மேன்மையடையச்செய்ய வேண்டிய தேவை உள்ளதாகவும் குறிப்பிட்டார். குறிப்பாக மீனவர்களால் பிடிக்கப்படும் மீன்களைப் பாதுகாக்க ஐஸ் தொழிலக வசதிகள் ஏற்படுத்தப்பட வேண்டும் எனவும் கூறினார்.

மேலும் யாழ் மாவட்டத்தில் உள்ள பொலிஸ் நிலையங்களில் தமிழ் தெரிந்த பொலிஸார் இல்லாமையினால் தமிழ்மக்கள் தமது முறைப்பாடுகளைப்பதிவு செய்வதில் பிரச்சினைகள் எதிர்நோக்கப்படுவதும் அவதானிக்கப்பட்டமை பற்றியும் கண்காணிப்புக்குழுத் தலைவர் தெரிவித்தார்.

இதேவேளை, நாட்டில் நிரந்தரமான சமாதானம் நிலவ எவ்வளவு காலம் பிடிக்கும் என நினைக்கின்றீர்கள் எனப் பத்திரிகையாளர் ஒருவரால் கேட்கப்பட்ட சமயம், 'ஒரு சந்ததிக்காலம் பிடிக்கலாம்- ஆனால் இப்போது இடம்பெற்று வரும் பேச்சுவார்த்தையின் பயனாக ஒரு சமாதான ஒப்பந்தம் விரைவில் ஏற்பட வாய்ப்புக்கள் காணப்படுகின்றன. நிரந்தர சமாதானத்தை நாட்டு மக்கள், மிகவும் குறிப்பாக இளைஞர் சந்ததி வற்புறுத்த வேண்டும்.'

யுத்தத்தினால் ஏற்பட்ட காயங்கள் மாற்றப்பட வேண்டும் அதற்கு மக்கள் பொறுமையாக இருக்க வேண்டியது அவசியம். யாழ்ப்பாண



மாவட்டத்தில் பொதுமக்களுக்கான பணிகளை விஸ்தரிக்க அரச அதிபருக்கு மேலும் வசதிகளும் ஆதரவுகளும் வழங்கப்பட வேண்டும்.

இந்த நாட்டின் இன்றைய சிறுவர்கள் தான் நாளைய செல்வங்கள். எனவே சிறுவர் மத்தியில் சமாதான சிந்தனையை ஊட்ட வேண்டும்.

இலங்கையில் கண்காணிப்புக் குழுவின் தலைவராகப் பணிசெய்ய வாய்ப்புக் கிடைத்தது நான் செய்த பாக்கியம்.

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காக அடித்தள வேலைகளைச் செய்யும் வாய்ப்புக் கிடைத்தமை திருப்தி தருவதாக குறிப்பிட்டார்.

இவர் நேற்றுப்பிற்பகல் பலாலி படைத்தலைமையகம் சென்று பிரதி படைத்தளபதி பொ.இரத்தினசபாபதியுடன் குடாநாட்டு நிலைமை பற்றிக் கலந்துரையாடினார்.

இன்று கிளிநொச்சியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் சமாதான செயலகப் பொறுப்பாளர் புலித்தேவனைச் சந்தித்துப் பேசவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-77,4)

# கடற்கரைப் பாதுகாப்பு சட்டத்தில் திருத்தம்

## வட-கிழக்கில் அதிக கவனம்

(கொழும்பு)

தேசிய கடற்கரை பிராந்திய முகாமைத்துவத் திட்டம் கடற்பாதுகாப்பு சட்டத்துக்கு அமைய இவ்வாண்டு திருத்தி அமைக்கப்படவுள்ளது.

கடற்கரைப் பாதுகாப்புச் சட்டத்தின் படி இச்சட்டம் ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை திருத்தப்பட வேண்டும்.

1990 ஆம் ஆண்டு தயாரிக்கப்பட்ட இச்சட்டம் கடந்த 1997 ஆம் ஆண்டு திருத்தப்பட்டது.

திருத்தத்தில் வடக்கு - கிழக்கு பிரதேசங்களின் கடற்பிராந்தியங்கள் குறித்து அதிக கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக கடற்கரை பாதுகாப்புப் பணிப்பாளர் ஆர்.ஏ.டி.பி. சமரநாயக்கா தெரிவித்துள்ளார்.

கடற்கரை சுற்றாடல் வலை அமைப்பு, கடல் மாசடைதல், கடலரிப்பு, நீர்வாழ் உயிரினங்கள் போன்ற விடயங்களை ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக குழுவொன்றும் நியமிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கரையோர பிரதேச உள்ளூராட்சி நிருவாகிகளிடம் இருந்து ஆலோசனைகள் கோரப்பட்டுள்ளதாகவும் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (உ-8)

# இலங்கைக்கு வழங்கும் உதவியை சுவிஸ் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் இவ்வாண்டுக்கான மாநாட்டில் வழங்கும் நிதியினை 7.5 மில்லியன் பிராங்காக சுவிஸ்லாந்து அதிகரித்துள்ளது.

அரசியல் விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் சுவிஸ் நாட்டிற்கான விஜயத்தை அண்மையில் மேற்கொண்டு அந்நாட்டு வெளிவிவகார அமைச்சரை சந்தித்து உரையாடிய போதே இவ் உறுதி மொழி அளிக்கப்பட்டது.

இச்சந்திப்பின் போது சுவிச்சர்லாந்து வெளிவிவகார அமைச்சர், அரசாங்கத்தினாலும் தமிழீழ விடுதலைப்புலிகளினாலும் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதான நடவடிக்கைகளுக்கும் நோர்வே அரசின் நடுவு நிலைமைப் பணிகளுக்கும் சுவிச்சர்லாந்து வெளிவிவகார அமைச்சர் பாராட்டுத் தெரிவித்தார்.

பேண் நகரில் நடைபெற்ற இச்சந்திப்பில் சுவிஸ்நாட்டு சமஷ்டி ஆட்சி முறை குறித்தும் ஆராயப்பட்டது.

அத்துடன் அந்நாட்டு முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்ய முன்வருமாறும் பீரிஸ் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கையின் சுற்றுலாத்துறைக்கு சுவிச்சர்லாந்து உதவி வழங்க வேண்டும் எனவும் அமைச்சர் அங்கு கேட்டுள்ளார். (உ-8)

# 200 வாடி வீடுகள் நாடு பூராக அமையும்

(கொழும்பு)

நாட்டின் சகல பகுதிகளிலும் 200 வாடி வீடுகளை அமைக்க இலங்கை உல்லாசப் பிரயாணசபை நடவடிக்கை எடுத்து வருகிறது.

இத்திட்டத்திற்கு அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் வெளிநாட்டு அமைப்புக்கள் மற்றும் அரச நிறுவனங்கள் என்பனவும் உதவ முன்வந்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தற்போது ஏற்பட்டுள்ள சமாதான சூழ்நிலையினை அடுத்து பெருமளவு உல்லாசப் பயணிகள் இலங்கைக்கு வருகை தருகின்றமையானது உல்லாசப் பிரயாண சபைக்கு அதிக வருமானத்தைப் பெற்றுக் கொடுக்கும் என எதிர் பார்க்கப்படுகிறது. (உ-10)

### ஐக்கிய தேசிய முன்னணி அரசின்

# சமாதான நடவடிக்கைகள் குறித்து ஜனாதிபதிக்கு மிகுந்த மகிழ்ச்சி

### ஸ்ரீ.சு.க.கூட்டத்தில் அவரே மனம் திறந்து தெரிவிப்பு

(கொழும்பு)

**கடந்த காலங்களில் நடைபெற்று வந்த யுத்தத்தினை தவிர்த்து, நாட்டில் நிரந்தர சமாதானம் நிலவ வேண்டும் என்பதற்காக ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் தற்போது எடுத்துவரும் நடவடிக்கைகளுக்கு ஜனாதிபதி என்ற ரீதியில் மிக்க மகிழ்ச்சி அடைவதாக ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்க தெரிவித்துள்ளார்.**

பேருவளையில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் களுத்துறை மாவட்ட சம்மேளனக் கூட்டத்தில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி மேற்கண்ட வாறு தெரிவித்தார்.

அக்கூட்டத்தில் தொடர்ந்து பேசிய ஜனாதிபதி,

சமாதான நடவடிக்கைகளை தற்போதைய அரசாங்கம் முன்னெடுத்துச் செல்லும் விதம் பெரும் சிக்கலாக உள்ளது போல் எனக்குத் தோன்றுகின்றது.

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்லப்படும் சமாதானத் துக்கும், கடந்த காலத்தில் என்னால் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளுக்கும் இடையே பாரிய வேறுபாடுகள் உள்ளன.

தமிழ் மக்களின் உரிமைகளையும், பண்பாட்டையும் பெற்றுக் கொடுப்பதில் கண்ணும் கருத்துமாக தற்போதைய அரசு உள்ளது.

இந்த நாட்டில் உன்னதமான நாகரிகத்தையும், கலாசாரத்தையும் கட்டி எழுப்பிய சிங்கள மக்களது உரிமைகளையும் பாதுகாத்துக் கொள்வதுடன், அதனை உறுதிப்படுத்தி அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பது அவசியம்.

இதேவேளை, சிங்கள மக்களுடன் பல நூற்றாண்டு காலமாக அந்நியோன்னியமாக வாழ்ந் துவரும் தமிழ், முஸ்லிம் மக்களினது உரிமைகளை உறுதிப் படுத்தக் கூடிய சமாதானத்தி லேயே நான் அதிக நம்பிக்கை கொண்டுள்ளேன்.

ஐக்கிய தேசிய முன்னணி அரசினால் தற்போது முன்னெடுக்கப்படும் சமாதான நடவடிக்கைகள் சகல அரசியல் கட்சிகளாலும் ஏற்கக்கூடிய ஒன்றாகும்.

அதில் சில மாற்றங்கள் கொண்டுவரப்பட்டு, அதனை வழிநடத்துவதினால் நாட்டில் நிரந்தர



சமாதானம் மலரும் என நம்பிக்கை வெளியிட்டுள்ளார். (உ-8)

# நாட்டில் இன்று 10 லட்சத்து 80 ஆயிரம் வாகனங்கள் பாவனையில் உள்ளன

## ஓட்டுநர் உரிமம் பெற்றவர்கள் 80 லட்சம்

(கோட்டை)

**நாட்டில் இன்று 10 லட்சத்து 80 ஆயிரம் வாகனங்கள் பாவனையிலுள்ளன. வாகனம் ஓட்டும் உரிமம் உள்ளவர்களின் எண்ணிக்கை 80 லட்சம்மாகும். வருடம் தோறும் 80 ஆயிரம் வாகனங்கள் பதிவு செய்யப்படுகின்றன. அதேபோல் 90 ஆயிரம் உரிமங்கள் வருடம் தோறும் வழங்கப்படுகின்றன.**

முன்னாள் போக்குவரத்து துணைபொலிஸ்மா அதிபரும் விபத்துத் தவிர்ப்பு சங்கத்தின் செயலாளருமான திரு.ரி.பேரின் பநாயகம் விடுத்துள்ள ஒரு அறிக்கையில் இந்த விபரம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அவரது அறிக்கையின் படி, வருடம் தோறும் நாட்டில் 52 ஆயிரம் விபத்துக்கள் நிகழ்கின்றன. 2 ஆயிரம் பேர் வீதி விபத்துக்களால் இறக்கின் றார்கள். ஒரு நாளில் 24 மணி நேரத்தில் ஏறத்தாழ 5 அல்லது 6 பேர் விபத்துக்களில் மரணமாகின்றார்கள். 60 பேர் காயமடைகின்றார்கள்.

40வீதமானவிபத்துக்கள் வாகன வேகத்தினால் ஏற்படு கின்றன.

வீதி விபத்துக்குள்ளாகிறவர்களில் பாதசாரிகள் 38 வீதம், பிரயாணிகள் 26 வீதம், சைக்கிள் ஓட்டிகள் 14 வீதமாகும்.

### *ஒரு வீதி விபத்து நேரும்போது*

விபத்தொன்று நேரும் பொழுது, வாகன ஓட்டிகளான உங்களுக்கு சில கட்டுப்பாடுகள் உள்ளன. நில்லுங்கள், குறித்த இடத்தைப் பாதுகாவல் செய்ய முயலுங்கள், அவ்விடத்தை நோக்கிவரும் வாகனங்களுக்கு எச்சரிக்கை கொடுங் கள், காயமடைந்தவர்களுக்கு உதவுங்கள், பிறர் உதவியை நாடுங் கள், பொலிசுக்குத் தகவல் கொடுங் கள் மேற்கொண்டும் தகவல்க ளைப் பெற முயலுங்கள்.

1.நீங்கள் ஒரு விபத்தில் சிக்கினால் அல்லது ஒரு விபத்தைக் காண நேர்ந்தால் (அ) முதலில் நீங்கள் செய்யவேண்டியது தரித்து நிற்பது. (ஆ) அவ்விடத்தை பத்திரமானதாக எச்சரிக்கை வெளிச்சத்தை (Hzard Lights) பளிச்சிடச் செய்தல்.

2.சம்பவ இடத்தில் தரித்து நில்லுங்கள்-போக்குவரத்திற்கு இடைஞ்சலாக இராதீர்கள்.

3.பொறுமையாக இருந்து-காயமடைந்தவர்களுக்கு உதவுங்கள், பிறர் உதவியை நாடுங் கள், முதலுதவி அளியுங்கள், அதற்கு நீங்கள் தகுதி பெற்றிருந் தால் அதுவும் தேவையானால் மட்டுமே இதைச் செய்ய வேண் டும்.

.4.பொலிசுக்கு அறிவியுங்கள்.

5.தேவை ஏற்படின் அம்புலன்சுக்கு அழைப்பு விடுங்கள்.

6.அவ்விடம் நோக்கிவரும் வாகனங்களுக்கு எச்சரிக்கை கொடுங்கள்.

7.சாதாரண விபத்தாக விருந்து, சம்பந்தப்பட்டவர்கள் தமக்கு இடையிலேயே சமரச மாக தீர்துக் கொள்வார் களா னால், வாகனங்களை அவ்விடத்திலிருந்து அகற்றி போக்குவரத்துக்கு இடமளியுங்கள். அதேநேரம் அருகாமையிலுள்ள பொலிஸ் நிலையத்திற்கு தகவல் கொடுங்கள்.

8.சம்பந்தப்பட்ட தரப்பினர் தமக்குள் சமரசமாக இணங்கிப் போக மறுப்பார்களாகில் சம்பவம் நடந்த இடத்தையும் எதிர்த்தரப்பு வாகனத்தின் சில்லுகளின் தடையங்களையும் அடையாளம் இடவும். வாகனப் போக்குவரத்துக்கு இடைஞ்சல் ஏற்படாதவகையில் சம்பந்தப்பட்ட வாகனங்களை ஒதுக்குப்புறமாக நிறுத்தலாம். விபத்துப் பற்றி உடனடியாக அருகில் உள்ள பொலிஸ் நிலை யத்திற்கு அறிவிக்கவும்.

9.விபத்தின் காரணமாக ஆபத்தான காயம் ஏற்பட்டிருக்கும் பட்சத்தில், வாகனங்களை அப்புறப்படுத்த வேண்டாம்-பொலிசாரின் அனுமதியின் பேரில் அவ்வாறு செய்யலாம்.

10.காயத்தினால் உயிராபத்து ஏற்படும் நிலை இருக்குமானால் உடனடி சிகிச்சைக்காக அவரை வைத்தியசாலைக்கு கொண்டு போகவும். வாகனம் எதுவும் கிடைக்காத பட்சத்தில் விபத்தில் சம்பந்தப்பட்ட வாகனத்தையே உபயோகிக்கவும். அதன் பின் உடனடியாகப் பொலிசுக்கு அறிவிக்கவும்.

11.ஒருவர் கொல்லப்பட்டு விட்டால், உடலை அப்புறப் படுத்தவேண்டாம். பொலிஸ் அல்லது பொலிஸ் அம்புலன்ஸ் வரும்வரை எவரையும் உடலை அப்புறப்படுத்தவும் அனுமதிக்க வேண்டாம்.

12.முதலுதவி அளிக்க நீர் தகுதி பெற்றிராவிடில் (அ)பிறர் உதவியை நாடுக. (ஆ) காயமடைந்தவருக்கு உதவுக-அவர்களை வெப்பமாக வைத்திருங்கள். (இ) இரத்தப் பெருக்கை நிறுத்த முயலுக-சுத்தமான துணியால் காயங்களைக் கட்டுக. (ஈ) காயமடைந்தவரின் மூச்சு நின்றுவிடும் பட்சத்தில், வாயில் வாய் வைத்து செயற் கைச் சுவாசிப்பிற்கு உதவுக. நீர் பதார்த்தம் எதுவும் கொடுக்க வேண்டாம். (உ) வாகனப் போக்குவரத்தினால் அல்லது தீயி னால் ஆபத்து உள்ளது எனக் கண்டால் காயமடைந்தவரை அப்புறப்படுத்துக.

13.ஆபத்தான பொருட்களை (காஸ் சிலிண்டர்கள், பெற்றோ லியப் பொருட்கள், இரசாயனங்கள்) ஏற்றிச் செல்லும் வாகனங்கள் விபத்தில் சம்பந்தப்பட்டிருப்பின் பொது மக்கள் அவ்விடத்தில் கூடாதபடி பார்த்துக் கொள் ளவும். நூறு மீற்றர் சுற்றளவில் எவரும் புகை பிடிக்காமல் பார்த் துக் கொள்க. அவ்விடத்தை ஆபத் தற்றதாக்கிக் கொண்டு, அதிகா ரிகளுக்கு (பொலிஸ், அம்பு லன்ஸ், தீயணைப்புப் படை) அறிவியுங்கள்.

14.நெருப்பில் இருந்து காப்பாற்ற அல்லது சிக்குண்டவரைக் காப்பாற்றுவதற்கு அன்றில் வாகனத்தை நகர்த்த வேண்டாம்.

15.தகவல்களைச் சேகரியுங்கள்

(அ) திகதி, நேரம், விபத்து நடந்த இடம்

(ஆ) எதிர் வாகனத்தின் ஓட்டுநர் பெயர்

(இ) அவரது முகவரி

(ஈ) வாகனத்தின் இலக்கம்

(உ) ஓட்டுநர் உரிம இலக்கம், அவரது காப்புறுதி இலக்கமும் முகவரியும், காயமடைந்தவர்களின் பெயர்கள், முகவ ரிகள், சாட்சிகளின் பெயர்கள், முகவரிகள்

(ஊ) விபத்து நடந்த இடத்தின் வரைபடம் ஒன்றை தயாரித்துக் கொள்க.

16.விபத்தின் சூழ்நிலை-காலநிலை, பாதையின் நிலைமை ஏனைய விபரங்கள்

17.புலனாய்வு செய்யும் அதிகாரியின் பெயரும் முகவரியும்.

18.புலனாய்வு அதிகாரியின் கேள்விகள் அனைத்திற்கும் விடையளியுங்கள். வேறு எவருடனும் விபத்துப் பற்றி விவாதிக்காதீர்கள்.

19.உமது காப்புறுதி ஸ்தாபனத்திற்கு அறிவித்தல் கொடுக்கவும்.

20.முக்கியம்-ஆத்திரத்தில் விபத்தல் சிக்கிய வாகனத்தைத் தகர்க்கவோ, எரிக்கவோ செய்யாதீர்கள். அது பின்வருவனவற்றுக்குத் தடையாக இருந்து விடலாம்.

1.பாதிக்கப்பட்ட பகுதிகளை, இரத்தக்கறைகளைப்பற்றிய விடயங்களை புலனாய்பவரால் அவதானிக்க முடியாமல் போகும்.

2.வாகனத்தைப் பரிசோதித்துப் பார்க்க முடியாமல் போகும்

3. விஞ்ஞானப் பூர்வமான பகுப்பாய்வுகள் செய்ய முடியா மல் போகும்.

4. பாதிக்கப்பட்டவருக்கு காப்புறுதி நிறுவனத்தினால் வழங்கப்படவேண்டிய தொகையை நிர்ணயிக்க முடியாமல் போகும்.



(இந்தக் குறிப்புக்களை எப்பொழுதுமே தமது வாகனங்களில் வைத்துக் கொள்ளும்படி வாகன ஓட்டிகளை திரு பேரின்பநாயகம் கேட்டுள்ளார.) (பி)

## சுதந்திர தினம் குறித்து சுற்றறிக்கை

(கொழும்பு)

இலங்கையின் 55 ஆவது சுதந்திரதினக் கொண்டாட்டம் தொடர்பான சுற்றறிக்கை உள் நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உளளூராட்சி அமைச்சின் செயலாளரினால் அமைச்சுக்களின் செயலாளர்கள், மாகாணசபைகளின் பிரதம செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள், அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

சுதந்திர தினத்தை முன்னிட்டு பெப்ரவரி 3ஆம் திகதி தொடக்கம் 5ஆம் திகதி வரை அரச கட்டடங்களில் தேசியக் கொடி பறக்கவிடப்பட வேண்டும் என அச்சுற்றறிக்கையில் அறிவுறுத்தப்பட்டுள்ளது. (உ-3)

### ஈராக் போர் மூண்டால்

# ஈரானில் 9லட்சம்பேர் தஞ்சம் புகுவார்கள்

(நியூயார்க்)

ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுக்கும் நிலை ஏற்பட்டால் ஈராக்கிலிருந்து தப்பி அண்டை நாடான ஈரானில் 9லட்சம்பேர் தஞ்சம் புகக் கூடும் என்று நிவாரண அமைப்பான ஆக்ஸ்பாம் வெள்ளிக்கிழமை வெளியிட்டுள்ள அறிக்கை தெரிவிக்கிறது.

இந்நிலையில், அகதிகளைத் தங்கவைப்பதற்கான ஏற்பாடுகள் மேற்கொண்டுவருகிறது ஈரான். ஏற்கனவே ஆப்கானிஸ்தானிலிருந்து 24லட்சம் பேரும் ஈராக்கிலிருந்து 4லட்சத்து 50ஆயிரம் பேரும் அகதிகளாக ஈரானில் உள்ளனர்.

இவர்களைப் பராமரிப்பது சாதாரண நடவடிக்கை அல்ல. எனவே அகதிகளுக்கு உதவ சர்வதேச நாடுகள் உதவி அளிக்கவேண்டும் என்று ஆக்ஸ்பாம் அமைப்பின் பிரதிநிதி பால் ஷெர்லாக் கோரிக்கை விடுத்துள் ளார்.

ஈராக் - ஈரான் எல்லைப்பகுதிகளுக்குச் சென்று பார்வையிட்ட பால்ஷெர்லாக் அது தொடர்பான அறிக்கையை வெளியிட்டார்.

ஈராக் மீது போர் மூளும்பட்சத்தில் அங்கிருந்து தப்பி பொதுமக்கள், இராணுவத்தினர், வெளிநாட்டுத் தொழிலாளர், வெளிநாட்டவர்கள் என ஏராளமானோர் ஈரானுக்குள் அகதிகளாக நுழையக்கூடும்.

அவர்களைத் தங்கவைக்க 19இடங்களை ஈரான் ஒதுக்கியுள்ளது என்றும் ஷெர்லாக் குறிப்பிட்டுள்ளார். (பி)

# திரிபுராவில் தீவிரவாதிகள் சூட்டுக்கு 11பொதுமக்கள் பலி; 6பேர் காயம்

(புதுடில்லி)

மேற்குத் திரிபுரா மாவட்டத்திலுள்ள கிராமம் ஒன்றில் தீவிரவாதிகளெனச் சந்தேகிக்கப்படுவோரால் நேற்று நடத்தப்பட்ட கண்மூடித்தனமான தாக்குதலில் 11பொதுமக்கள் பரிதாபகரமாகக் கொல்லப்பட்டதுடன், 6பேர் காயமடைந்துள்ளனர்.

10பேர் அடங்கிய தீவிரவாதிகள் என்று சந்தேகிக்கப்படும் குழு, சம்பவம் நடந்த கிராமத்தின் 4வீடுகளுக்குள் திடீரெனப் புகுந்து அங்கிருந்த பொதுமக்கள் மீது சுட்டபோது 9பேர் அந்த இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

ஏனைய இருவரும் வைத்திய சாலையில் உயிரிழந்துள்ளனர்.

சம்பவம் இடம்பெற்ற இடத்திற்கு விரைந்த உயர் பொலிஸ் அதிகாரிகள், விசாரணை நடத்தினர் இது கோழைத்தனமான செயல் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

இத்தாக்குதலை நடத்திய குழுவைக் கண்டுபிடிப்பதற்காக விசேட குழுவொன்று அமைக்கப்பட்டு தீவிரமான தேடுதல் நடத்தப்படுவதாக அறிவிக்கப்பட்டது.

இச்சம்பவத்துக்கு எந்த ஒரு தீவிரவாதக் குழுவும் பொறுப்பேற்கவில்லை. (பி-2)

WORLD NEWS உலக தரிசனம்

# உலகில் வேலையில்லாதோர் எண்ணிக்கை 18கோடியாகும்

(லண்டன்)

உலகில் வேலையில்லாதவர்களின் எண்ணிக்கை 18கோடியாக உயர்ந்துள்ளதாக சர்வதேச தொழிலாளர் ஸ்தாபன அலுவலகம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக சர்வதேச தொழிலாளர் ஸ்தாபனத்தைச் சேர்ந்த பெண் அதிகாரியான சந்தல் ஹரஸ்டி செய்தியாளர்களிடம் கூறுகையில்,

1990இல் வேலையில்லாதோர் எண்ணிக்கை உலகளாவிய ரீதியில் 10கோடியாக இருந்தது,

2001இல் இது 16கோடியாக உயர்ந்து தற்போது 18கோடியாக மேலும் அதிகரித்துள்ளது.

இதற்குக் கடந்த இரண்டு ஆண்டுகளாக ஏற்பட்ட பொருளாதார வீழ்ச்சியே காரணம் என்று குறிப்பிட்டுள்ளார்.

இவ்வாறு வேலையின்மைப் பிரச்சினை. தொடர்ந்து அதிகரித்தால் உலக சமூகம் பெரும் பாதிப்புக்குள்ளாகும் என்று மேலும் கூறியுள்ளார். (பி-2)

## செக். ஜனாதிபதி தேர்தல்


(ப்ராக்)

செக் குடியரசில் நேற்று முன்தினம் நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலின் இரண்டாம் சுற்றுவாக்களிப்பில் முன்னாள் பிரதமர் ரக்லக் குலோஷ் வெற்றி பெற்றுள்ளதாகத் தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

இவருடன் போட்டியிட்ட சுயேட்சை வேட்பாளர் செனற்டர் ஜாரோஸ் லோவா மொஷோரோவாவும் மூன்றாம் சுற்றுக்குத் தெரிவாகியுள்ளனர். (பி-2)



தேவதாஸ் திரைப்படம், சிங்கப்பூரில் நடைபெற்ற எம் டிவி ஆசிய விருது வழங்கும் விழாவில் சிறந்த திரைப்படமாகத் தேர்வு செய்யப்பட்டது. இந்த திரைப்பட்டத்தின் இசையமைப்பாளர் ஏ.ஆர்.ரஷ்மானுக்கு எம் டிவி ஆசிய விருது அளிக்கப்படுகிறது. ஏ.ஆர் ரஷ்மானுடன் கனடா நாட்டுப் பாடகி அவ்ரில்லாவிக்னி உள்ளார்.



1492ல் ஆண்ட்ரியா மான்டெக்ரா என்ற ஓவியரால் வரையப்பட்ட இந்த ஓவியம் நியூயோர்க்கிலுள்ள ஏலமையத்தில் கடந்த வியாழக்கிழமை 143கோடி 84லட்சம் டொலருக்கு ஏலம் போனது. இதனை தொலைபேசிமூலம் ஏலம் எடுத்தார் ஒருவர்.

# சீனாவில் உருவாகியுள்ள புழுதிப் புயல் உலக நாடுகள் பலவற்றைப் பாதிக்கும் அபாயம்

(லணடன)

சீனாவில உருவாகிவரும் மிகப் பெரிய புழுதிப் புயல் அந்நாட்டில் பெரும் அழிவை ஏற்படுத்தக்கூடும் என்று லண்டனில் இருந்து வெளியாகும் இன்டிபென்டட் என்ற பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

வாஷிங்டனில் உள்ள நில ஆய்வு நிலையத்தின் தலைவர் லெஸ்டர் பிரவுன் இதைத் தெரிவித்ததாக அப்பத்திரிகையில் கூறப்பட்டுள்ளது.

இந்தப் புழுதிப் புயல் ஆயிரக் கணக்கான கிலோமீற்றர் பரப்பளவுக்கு பரந்துவிரிந்துள்ளது. வடக்கு சீனாவில் இது தோன்றியுள்ளது.

1930ஆம் அண்டு அமெரிக்காவில் பேரழிவை ஏற்படுத்திய புழுதிப் புயலைவிட இது மோசமானதாக இருக்கக்கூடும்.

தரையில் உள்ள வளமான மண்ணெயெல்லாம் அப்படியே அள்ளிச் சென்று கருமேகமாக உருவாகும் இப்புயல் காரணமாக சீனாவில் பெய்ஜிங உட்பட பெரிய நகரங்களில், பகல் நேரமே இருட்டாகிவிடும்.

புழுதிப் புயல் காரணமாக லட்சக்கணக்கான மக்கள் மூச்சுவிடச் சிரமப்படுவர். ஆயிரக்கணக்கான ஏக்கர்களில் பயிர்கள் அழியக் கூடும். உணவுப் பற்றாக்குறையும் ஏற்படும்.

இதன் விளைவாக உலகின் பல நாடுகளிலும் உணவுப் பற்றாக்குறை ஏற்படலாம்.

இந்தப் புழுதிப் புயல் காரணமாக ஜப்பான் தென்கொரியா ஆகிய நாடுகளில் விமான நிலையங்களும், சிலபள்ளிக் கூடங்களும் மூடப்பட்டன.

இந்தப் புயல் அள்ளிச்செல்லும் மண் மீண்டும் தரையில் பதிய பல நூற்றாண்டுகள் ஆகலாம்.

சீனாவில் பாலைவனப் பகுதிகள் விரிவடைவதன் அறிகுறிதான் இந்தப் புயல் பாலைவன மணல் பகுதி விரிவடைவதால் சீனாவில் 4000கிராமங்களை மணல் மூடும் அபாயம் உள்ளது.

சீனா முழுவதும் லட்சக்கணக் கானவர்கள் தங்கள் நிலங்களில் இருந்து வெளியேற வேண்டியிருக்கும்.

காடுகள் அழிக்கப்பட்டு, விளை நிலங்கள் அதிகமாக உருவாக்குதல். மேய்ச்சல் நிலம் அதிகரிப்பு, மரங்கள் அதிகமாக வெட்டப்படுதல், நிலத்தடி நீரை அதிகமாக எடுத்தல் போன்ற காரணங்களால் இத்தகைய பேராபத்து ஏற்படுகிறது.

இந்த ஆபத்தை உணர்ந்துள்ள சீனா, 260லட்சம் ஏக்கர் நிலத்தில் மரக்கன்றுகளை நட்டு வருகிறது. ஆனால் தேவையான மண்வளம் இல்லாததால் பெரும்பாலான் மரக்கன்றுகள இறந்துவிடுகின்றன. (பி)

## அரபு எமிரேட்ஸ் திருப்பியனுப்பியது

(அபுதாபி)

தடைசெய்யப்பட்ட இந்திய மாணவர் இஸ்லாமிய இயக்கத்தின் தொண்டர் என சந்தேகிக்கப்படும் மொஹமட் அலிஷாரை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் இந்தியாவுக்கு நாடு திருப்பியனுப்பியுள்ளது.

கடந்த வருடம் டிசம்பர் மாதம் இந்தியாவில் 2ஆம் திகதி பேருந்துகளில் குண்டுவைத்துத் தாக்குதல் நடத்தியவர்களுக்கு நிதி உதவி வழங்கி வந்த இந்த நபர் துபாயில் கைது செய்யப்பட்டார்.

இந்த நபரை ஐக்கிய அரபு எமிரேட்ஸ் நேற்றயதினம் தாய்நாடு திருப்பி அனுப்பியுள்ளது. (பி-2)

# வீரப்பன் குழுவினருடன் மோதல் நடக்கவில்லை

(புதுடில்லி)

வீரப்பன் குழுவினருடன் கர்நாடக அதிரடிப்படையினர் மோதல்களில் ஈடுபட்டதாக வெளியான செய்திகளை தமிழக அதிரடிப்படையினர் மறுத்துள்ளனர்.

கர்நாடக மாநிலத்திற்கு அருகே இருக்கின்ற காட்டுப்பகுதியொன்றில் வீரப்பன் குழுவினர் நடமாடி வருவதாக கிடைத்த தகவல்களையடுத்து,

தமிழக, கர்நாடக கூட்டு அதிரடிப் படையினர் தலைவர் தேவாரம் தலைமையில், நேற்று முன்தினம் தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருந்தனர்.

அச்சமயம் மிகவும் அடர்ந்த காட்டுப்பகுதியில் வீரப்பன் குழுவினர் மறைந்திருக்கலாம் என்ற சந்தேகத்தின் பேரில் அந்தப்பகுதியை நோக்கி அதிரடிப்படையினர் குண்டுகளை வீசியபோது, வீரப்பன் குழுவினரிடம் இருந்து எந்தவித எதிர்ப்பும் வரவில்லையெனத் தெரிவித்த தமிழக அதிரடிப்படையினர்,

இது தொடர்பாக மோதல்கள் இடம்பெற்றதென வெளியான செய்திக்கு மறுப்புத் தெரிவித்துள்ளனர். (பி-2)

# ஒத்துழைக்கும் விஞ்ஞானிகள் குடும்பத்தோடு அழிவர்

## சதாம் இப்படி அச்சுறுத்தியுள்ளாராம்

(வாஷிங்டன்)

ஐ.நா ஆயுதபரிசோதகர்களுடன் ஒத்துழைக்கும் விஞ்ஞானிகள் 'அவர்களுடைய குடும்பங்களுடன் கொலைசெய்யப்படுவார்கள் என்று ஈராக்கிய அதிபர் சதாம் ஹுசைன் அச்சுறுத்தியுள்ளார் என்று அமெரிக்க துணை பாதுகாப்பு அமைச்சர் பால்வொட்பௌவிட்ஸ் தெரிவித்துள்ளார்.

சோதகர்களை ஏமாற்றுவதற்குப் பல வழிகளிலும் ஈராக் முயற்சி செய்து வருவது பற்றி பல்வேறு தகவல்கள் தங்களுக்குக் கிடைத்திருப்பதாக அவர் கூறினார்.

ஆயுதப் பரிசோதனையாளர்களுடனான பேட்டிகளின் போது என்ன கூறவேண்டும் என்பது பற்றி விஞ்ஞானிகளுக்குப் பயிற்சி கொடுக்கப்படுவதாகவும், விஞ்ஞானிகள் போல் வேடமிட்டுக்கொண்டு உளவுத்துறை அதிகாரிகள் பரிசோதனைகளின் முன் பேட்டியளிக்கத் தோன்றுவதாகவும் தகவல் கிடைத்திருப்பதாக அவர் கூறினார்.

ஆறு விஞ்ஞானிகள் ஏற்கனவே ஆயுதப்பரிசோதகர்கள் முன் கருத்துக் கூறுவதற்கு முன்வர மறுத்துள்ளார்கள் என்றும்

உண்மைகளைக் கூறினால் ஏற்படக் கூடிய எதிர்விளைவுகளை உத் தேசித்தே இவர்கள் இரகசியமாக சாட்சியம் கூற முன் வருகிறார்கள் என்று, கூறப்படுகின்றது.

ஈராக்கிய அதிகாரிகளின் பிரசன்னம இல்லாமலே விஞ்ஞானிகளை விசாரிப்பதற்கு ஆயுதப் பரிசோதகர்களுக்கு அதிகாரம் இருப்பதா கக் கூறப்படுகின்றது. (பி)



இந்தியாவில் அண்மையில் நடந்த குடியரசுத் தினத்தின் ஒத்திகையின்போது மண் பானையை வாயல் கவ்வி சாகாசம் புரியும் பள்ளி மாணவி.

# பொருளாதார நெருக்கடியை தவிர்க்க முன்கூட்டியே ஆலோசனை

(கொழும்பு)

மத்திய கிழக்கு நாடுகளில் யுத்தம் மூண்டால் இலங்கைப் பொருளாதாரத்திற்கு ஏற்படக் கூடிய பாதிப்புக்களை சமாளிப்பதற்கான நடவடிக்கைகள் குறித்து இப்போதே கவனம் செலுத்த வேண்டும்;

இவ்வாறு வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவிகருணாநாயக்கா சுட்டிக் காட்டியுள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

இதனை முன்னிட்டு ஒரு தீர்க்கமான பொருளாதாரக் கொள்கையினை அரசு வகுக்க வேண்டும்.

ஈராக்கை அமெரிக்கா தாக்குமாயின், எரிபொருட்களின் விலை அதிகரிப்போடு ஏனைய அத்தியாவசியப் பொருட்களின் விலைகளும் அதிகரிக்கும்;

இவற்றுக்கு ஈடு கொடுக்கும் வகையில், எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகள் குறித்து இப்போதிருந்தே செயற்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

மத்திய கிழக்கு நாடுகளில் போர் ஏற்படும் அபாயம் தோன்றி வருவதை அடுத்து, தென்கிழக்காசிய நாடுகள் அனைத்தும் எண்ணெய் மற்றும் அத்தியாவசிய பொருட்களை களஞ்சியப்படுத்தி வைப்பதில் தற்போது ஆர்வம் காட்டி வருகின்றமை குறித்தும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்; (உ-8)

## அனுராதபுரம் - ஏ-9 வீதி மக்கள் பாவனைக்கு

(கொழும்பு)

அனுராதபுரம் நகரப் பகுதியை ஏ-9 வீதியுடன் இணைக்கும் பெருந் தெரு மக்களின் பாவனைக்காக திறந்து விடப்பட்டுள்ளது;

1985 ஆம் ஆண்டு தொடக்கம் அனுராதபுரம் புகையிரத நிலையம் மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையம் என்பவற்றிற்கு பாதுகாப்புக் கருதி இப்பாதை மூடப்பட்டது.

நாட்டில் தற்போது ஏற்பட்டுள்ள சமாதானச் சூழ் நிலையைத் தொடர்ந்து அனுராதபுர மாவட்ட மக்களின் கோரிக்கைகளுக்கு இணங்க இப்பாதை திறக்கப்பட்டுள்ளது.

தொல் பொருள் திணைக்களத்தின் பாதுகாப்பு பகுதியூடாக புதிய பாதை ஒன்று அமைக்கப்பட்டு அம்பாறையூடாக கடந்த 18 வருடங்களாக போக்குவரத்து நடைபெற்றன என்பது குறிப்பிடத்தக்கது: (க-08)

## நீடிக்கப்பட்டுள்ளது

பலரின் வேண்டுகோளுக்கிணங்க ஆறாம் தர மாணவர்களின் கட்டுரைப் போட்டி விண்ணப்ப திகதி 30-01-2003 வரை நீடிக்கப்பட்டுள்ளது.

## மாணவர்களுக்கான கட்டுரைப் போட்டி

பாடசாலை மாணவர்களுக்காக மாதமொரு கட்டுரைப் போட்டி.

### பரிசில்கள்

1 ஆம் பரிசு ரூபா 500
2 ஆம் பரிசு ரூபா 250
3 ஆம் பரிசு ரூபா 150

மற்றும் தகுதியான கட்டுரைகளுக்குச் சான்றிதழ்களும் வழங்கப்படும்;

★ அமரர் ச அம்பிகைபாகன் (முன்னாள் அதிபர் யாழ். வைத்தீஸ்வராக் கல்லூரி) அவர்கள் ஞாபகார்த்தமாக இப் பரிசில்கள் வழங்கப்படும்,

### போட்டியின் விதிகள்:

★ ஆறாம் தரத்தில் இப்பொழுது கற்கும் மாணவர்கள் மட்டும் இப் போட்டியில் பங்கு பற்றலாம்;

★ கட்டுரையின் தலைப்பு ''எமது கிராமம்''

★ கட்டுரை 100 தொடக்கம் 125 சொற்களுக்குள் அமைதல் வேண்டும்;

★ புல்ஸ்காப்தாளில் ஒவ்வொரு பக்கத்தில் எழுதப்படல் வேண்டும்;

★ கட்டுரைகள் 30-01-2003ற்கு முன்னதாக ''மாணவர் கட்டுரைப் போட்டி'' வலம்புரி, 15 வெள்ளாந் தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரிக்கு பின் வரும் பத்திரத்தையும் நிரப்பி இணைத்து அனுப்பவும்;

### இணைக்கும் பத்திரம்

**கட்டுரைப் போட்டி இல-1**

மாணவர் முழுப் பெயர் ____________

பாடசாலை ____________

கற்கும் தரம் ____________

உறுதிப்படுத்துகிறேன் ____________

வகுப்பாசிரியர்

## மாசிமக இலட்சார்ச்சனை

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காபுரம் ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மாசிமக இலட்சார்ச்சனை எதிர்வரும் மாதம் 7 ஆம் திகதி முதல் 16 ஆம் திகதி வரையான 10 தினங்கள் நடைபெற்று மறுநாளான 17 ஆம் திகதி விசேட அபிடேகம் மாசிமகப் பெருவிழாவும் நிகழவுள்ளது. (உ)

## மேயருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

(கொழும்பு)

கொழும்பு மாநகரசபை மேயர் பிரசன்ன குணவர்த்தனவுக்கு எதிராக பிரதிமேயர் தலைமையிலான 18 உறுப்பினர்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் நடத்தி வருகின்றனர்.

கொழும்பு மாநகரசபையின் எதிர்க்கட்சித் தலைவருக்கு, கொழும்பு மாநகர மேயர் பிரத்தியேக அறையொன்றினை மாநகர சபையில் வழங்கி இருந்தார்.

இதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே பிரதிமேயர் தலைமையிலான 18 பேரும் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர். (க-8)

## ஏ-9 வீதிப் போக்குவரத்து சேவை இடைநிறுத்தப்படும்

(கொழும்பு)

எதிர்வரும் 15 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் ஏ-9 வீதியூடான போக்குவரத்துச் சேவைகள் யாவும் இடைநிறுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

ஏ-9 வீதியைப் புனரமைப்பதற்காகவே இப் போக்குவரத்து சேவைகள் இடைநிறுத்தப்படவுள்ளன;

அதேவேளை, யாழ்ப்பாணம் செல்லும் பயணிகள் உயிலங்குளம், பூநகரி சங்குப்பிட்டி ஊடாகவும் வன்னி செல்லும் பயணிகள் மடு, பள்ளமடு, வெள்ளாங்குளம் ஊடாகவும் தமதுபயணத்தை மேற்கொள்ள மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. (உ-10)

## இந்திய அரசுக்கு சிஹல உறுமய பாராட்டு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கில் அமைந்துள்ள பௌத்தவிகாரைகளைப் பாதுகாக்க இந்திய அரசு முன்வந்துள்ளதைஇட்டு சிஹலஉறுமய மகிழ்ச்சி தெரிவித்துள்ளது.

இந்திய அரசின் இந்த முயற்சிக்கு கலாசார அமைச்சு ஒத்துழைக்க வேண்டும்எனக் கோரி இலங்கை கல்வி மனிதவள கலாசார அமைச்சரிற்கு ஜே.வி.பி. கடிதம்ஒன்றையும் அனுப்பியுள்ளது.

இதேவேளை, வடக்கு-கிழக்கு மாகாணங்களில் கடந்தகால யுத்தத்தினால் சேதமடைந்துள்ள பல இந்து ஆலயங்கள் திருத்தப்படாத நிலையிலும் முற்றாக சேதமடைந்த நிலையிலும் உள்ளன.

அதேவேளை வடக்கு-கிழக்கில்உள்ள பௌத்தவிகாரைகளை பாதுகாக்க இந்தியா முன்வந்துள்ளமை தமிழ்மக்களிடையே அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது. (உ-10)

## ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைப் பணிகள் நேற்றுமுதல் வழமைபோல்

ஸ்ரீஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகம் கல்விநடவடிக்கைகளுக்காக நேற்று மீண்டும் திறக்கப்பட்டது;

கலை, முகாமைத்துவ மருத்துவ பீட முதலாம் வருட மாணவர்களுக்கான விரிவுரைகளே நேற்றுநடை பெற்றதாக கலைக்கழக உபவேந்தர் தெரிவித்துள்ளார்.

பல்கலைக்கழகத்தில் முழுமையாக கல்வி நடவடிக்கைகளை ஆரம்பிக்கப்பட்டபின்னர், மாணவர்களின் நன் நடத்தைகள், பாதுகாப்பு மற்றும் உரிமைகள் உறுதிப்படுத்தல் தொடர்பாக பல நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

பல்கலைக் கழக வளாகத்துக்கு அருகில் பொலிஸ் காவல் நிலையம் ஒன்றை அமைக்கவும் மாணவர்களுக்கு கணனிமயப்படுத்தப்பட்ட அடையாள அட்டைகள் வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளது

பகிடிவதை காரணமாக மூன்றாம் வருட மாணவன் ஒருவன் கொல்லப்பட்டதை தொடர்ந்து கடந்த இரண்டரை மாதங்களாக மேற்படி பல்கலைக்கழகம் மூடப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-8)

## இன்று சந்திப்பு

அரசாங்க மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் இடைக்கால நிறைவேற்றுக்குழு சுகாதார அமைச்சின் செயலாளர், சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் ஆகியோரை இன்று சந்தித்துபேச்சுவார்த்தை நடத்தவுள்ளது.

இச் சந்திப்பில் மருத்துவர்களின் சம்பள முரண்பாடுகள், பட்டப் பின் படிப்பு பாடநெறிக்கான கட்டணம் 100 சதவீதத்தால் அதிகரித்தமை ஆகிய விடயங்கள் குறித்து ஆராயப்படவுள்ளது. (உ-8)

# ஸ்ரீ. சு. கட்சி - ஜே. வி. பி. கூட்டு வெறும் பூச்சாண்டி விளையாட்டு

## அரசியல் வட்டாரங்கள் கருத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி, மக்கள் விடுதலை முன்னணி ஆகியவற்றின் கூட்டமைப்புத் தொடர்பான இறுதிமுடிவுகள் எதிர்வரும் மார்ச் மாதம் வரை வெளியிடப்படமாட்டாது என தெரிவிக்கப்படுகிறது.

இவ் இரு கட்சிகளினதும் கூட்டமைப்பு தொடர்பான இறுதி முடிவுகள் எவையும் இதுவரை எடுக்கப்படவில்லை ஆனால் அரசியல் வட்டாரங்களில் கூட்டமைப்பு அமைப்பதாக கூறிக்கொண்டு பூச்சாண்டி காட்டிவருகின்றனர் என்று அரசியல் வட்டாரங்கள் கருத்து வெளியிட்டுள்ளன

இதற்கிடையில் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமரதுங்கவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் பொதுச் செயலாளர் டி. எம். ஜெயரட்ணாவும் இது குறித்த கலந்துரையாடலை கடந்த வார இறுதியில் நடத்தியுள்ளனர்.

இக் கலந்துரையாடலில் மக்கள் விடுதலை முன்னணி ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இணைந்து குறித்த திட்டங்களை ஜனாதிபதி பொதுச் செயலாளரிடம் கையளித்தார்;

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமை அத்திட்டங்களை கட்சியின் நிறைவேற்றுக் குழுவிடம் கையளிக்கவுள்ளது

நிறைவேற்றுக் குழுவிடம் இத்திட்டங்கள் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர், அடுத்த மாத நடுப்பகுதியில் மத்திய குழுகூடவிருக்கிறது.

இதேவேளை, மக்கள் விடுதலைமுன்னணியின் பிரசாரச் செயலாளர் விமல் விரவன்ச, பொதுஜனஐக்கிய முன்னணியின் பாராளுமன்றஉறுப்பினர் அனுரா பண்டாரநாயக்காவை சந்தித்துள்ளார்;

இச்சந்திப்பு வெற்றிகரமாக இடம்பெற்றதாக கூறி வந்தாலும் இவ்விருகட்சிகள் இடையேயும் இன்னமும் இணக்கப்பாடு காணப்படவில்லை என அரசியல் வட்டாரங்கள் மேலும் தெரிவித்துள்ளன;

கட்சிகள் இரண்டுக்கும் இடையே நடைபெற்ற கலந்துரையாடல்கள் குறித்த அறிக்கைகள், லண்டனில் உள்ள மக்கள் விடுதலை முன்னணியின் தலைவருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன;

அவ்வறிக்கைகளை ஆராய்ந்து இறுதிமுடிவுகளை தலைவர் அறிவிக்கும் வரை தாம் எதுவித தீர்மானத்தையும் எடுக்கப் போவதில்லை என அக்கட்சி அறிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (உ-8)

## சுரேஸ் அணியின் மாவட்டச் செயலகம் புதிய இடத்தில்

(யாழ்ப்பாணம்)

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணி சுரேஸ் அணியின் யாழ். மாவட்டச் செயலகம், இலக்கம் 6, முதலாம் ஒழுங்கை, பருத்தித்துறை, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் தற்போது இயங்கி வருவதாகவும் சகல தொடர்புகளையும் இம் முகவரியுடனேயே வைத்துக் கொள்ளுமாறும் கட்சியின் யாழ். மாவட்டச் செயலாளர் அ. உதயகுமார் அறிவித்துள்ளார். (உ)

# வடக்கு-கிழக்கில் 3,000 ஆசிரியர்களை நியமிக்க அமைச்சரவை அங்கீகாரம்

## கல்வி அமைச்சர் விடுத்த அறிக்கையில் தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு பகுதிகளில் நிலவும் தமிழ்மொழி மூல ஆசிரியர்களின் பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் வகையில் 3 ஆயிரம் ஆசிரியர்களையும் 193 தொண்டர் ஆசிரியர்களையும் நியமிப்பதற்கு அமைச்சரவை அங்கீகாரம் அளித்துள்ளது.

கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு விடுத்துள்ள அறிக்கையொன்றில் இவ்வாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் மட்டும் 6 ஆயிரம் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுகிறது.

இதேவேளை, வடமேல் மற்றும் வடமத்திய மாகாணங்களில் தமிழ் மொழி மூல பாடசாலைகளில் ஆசிரியர் பற்றாக்குறை நிலவி வரும் அதேவேளை சிங்கள மொழி மூல பாடசாலைகளில் மேலதிகமாக ஆசிரியர்கள் இருக்கின்றனர்.

இந்த நிலையில், தொண்டர் ஆசிரியர்கள் தம்மை நிரந்தர நியமனமாக்குமாறு கோரி போராட்டம் நடத்துவது நியாயமற்றது எனவும் அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் அறிக்கையில் மேலும், வடமத்திய மாகாணத்தில் 164 தமிழ் ஆசிரியர்களுக்கு வெற்றிடம் நிலவும் வேளை 114 சிங்கள ஆசிரியர்கள் மேலதிகமாகவுள்ளனர்.

வடமேல் மாகாணத்தில் 694 தமிழ் மொழிமூல ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை நிலவுவதுடன், ஆயிரத்து 458 சிங்கள ஆசிரியர்கள் மேலதிகமாக உள்ளனர்.

1990 ஆம் ஆண்டு முதல் தொண்டர் ஆசிரியர்களை ஆசிரியர் பதவிகளில் இணைத்துக் கொள்வதில்லை என கொள்கை ரீதியாக கல்வி அமைச்சு தீர்மானம் நிறைவேற்றி உள்ளதுடன், இது தொடர்பாக மாகாண சபைகளுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவிக்கப்பட்டது.

பயிற்சி பெறாத மற்றும் தகுதியற்ற ஆசிரியர்களை ஆசிரியர் சேவைகளுக்கு சேர்த்துக்கொள்ளக்கூடாது என இணக்கம் காணப்பட்டுள்ளதால் ஆசிரியர் சேவைக்கான டிப்ளோமா மற்றும், அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழக பட்டதாரிகளை மட்டுமே சேவையில் சேர்த்துக்கொள்வது என்றும் முடிவெடுக்கப்பட்டது என அவ்வறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது. (உ-8)

## 7,400 மாணவர்களுக்கு இவ்வாண்டு புலமைப் பரிசில்

(கொழும்பு)

மகாபொல புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் இவ்வருடத்தில் 7 ஆயிரத்து 400 மாணவர்களுக்கு புலமைப்பரிசில் வழங்கப்படவுள்ளதாக வர்த்தக நுகர்வோர் விவகார அமைச்சர் ரவி கருணாநாயக்க தெரிவித்துள்ளார்.

இத்திட்டத்தின் கீழ் இதுவரை 17 ஆயிரம் மாணவர்கள் நிதியுதவியைப் பெற்று உயர் கல்வியைத் தொடரவுள்ளனர். (உ-3)

## பணி நிறுத்த போராட்டம்

(வவுனியா)

வவுனியா அரசினர் ஆதார வைத்திய சாலையில் இரவு நேர கடமையில் இருந்த காவலாளி தாக்கப்பட்டமைக்கு கண்டனம் தெரிவித்து, நேற்று இருமணி நேர வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது.

வவுனியா அரசினர் ஆதார வைத்தியசாலைக்கு முன்பாக காலை 8.00 மணி தொடக்கம் 10.00 மணி வரையும் வேலை நிறுத்தப் போராட்டம் நடைபெற்றது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை அதிகாலை, விடுதியில் இருந்த நோயாளர் ஒருவரை பார்வையிட அனுமதிக்கும்படி மது போதையில் வந்திருந்த இருவர் காவலாளியை கேட்ட போது இதற்கு அனுமதிக்க மறுத்த காவலாளியை அவ் இருவரும் தாக்கி விட்டு தப்பிச் சென்ற வேளை வைத்தியசாலை பொலிஸாரால் ஒருவர் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (உ-8)

## புலிகளின் பெயரைக்கூறி கப்பம் கோரிவந்த இருவர் சிக்கினர்

(வவுனியா)

தமிழீழ விடுதலைப்புலிகள் எனகூறி பிரபல வர்த்தக நிறுவனங்களிடம் கப்பம்கேட்டு வந்த இருவரை பொலிசார் கைதுசெய்துள்ளனர்.

கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட இவர்கள் மட்டக்களப்பைச் சேர்ந்தவர்கள் என்றும் இவர்களுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கும் இடையில் எந்தவித தொடர்பும் இருக்கவில்லை என்றும் பொலிசார் மேற்கொண்ட விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது. (உ-10)

## போதைப் பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்த திடீர் சுற்றிவளைப்புகள்

(கொழும்பு)

போதைப் பொருள் கடத்தல்களைக் கட்டுப்படுத்துவதற்காக பிரதான துறைமுகங்களில் திடீர் சுற்றிவளைப்புக்களை பொலிஸ் தலைமையகம் மேற் கொண்டுவருகிறது.

இதற்கென விசேடபயிற்சி பெற்ற பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட குழுவினர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

போதைப் பொருட்களுக்கான பரிமாற்று நிலையமாக தற்போது இலங்கை மாறிவருவதல் அதையடுத்தே இந் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் பொலிஸ் தலைமையகம் தெரிவித்துள்ளது. (உ-10)

## 50 லட்சம் செலவில் கைதடி ஆயுர்வேத ஆஸ்பத்திரி புனரமைப்பு

(கொழும்பு)

ஆயுர்வேத மருத்துவ வசதிகளை மேம்படுத்துவதற்கு சுகாதார அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதற்காக மூன்று கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளது.

அத்துடன், கைதடியில் யுத்தஅனர்த்தம் காரணமாக முற்றாக சேதமடைந்துள்ள போதனா ஆயுர்வேத வைத்தியசாலையை 50 இலட்சம்ரூபா செலவில் புனரமைக்கவும் சுகாதார அமைச்சு திட்டமிட்டுள்ளது. (உ-8)

## காரைநகரில் இருந்து பயன்தரு மரங்கள் வாகனங்களில் கொண்டு செல்வதற்குத் தடை

(காரைநகர்)

காரைநகரிற்கு வெளியே வாகனங்களில் பூவரசு, வேம்பு ஆகிய பயன்தரும்மரங்கள் விறகுக்காகக் கொண்டுசெல்வதற்கு முற்றாக தடைவிதிக்கப்பட்டுள்ளது.

நேற்றுமுன்தினம், காரைநகர்பகுதி கிராமசேவையாளர்கள், சமுர்த்தி உத்தியோகத்தர்கள், காரைநகர் பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஒன்றுகூடி இத் தீர்மானத்தை நிறைவேற்றியுள்ளனர்.

விறகு ஏற்றும் போர்வையில் இப்பகுதியில் பயன்தரு மரங்கள் அழிக்கப்பட்டு வருகிறது.

அத்துடன், வாகனங்களில் மரங்களிற்குகீழே கதவு, மேசை போன்ற வீட்டுப் பொருட்கள் களவாக காரைநகரைவிட்டு கடத்தப்படுவதும் தெரியவந்துள்ளது.

இதனையடுத்தே வாகனங்களில் விறகு ஏற்றுவது முற்றாக தடை செய்யப்பட்டுள்ளதுடன் சைக்கிளில் விறகு கொண்டு சென்று விற்பவர்கள் கொத்திய நிலையிலான விறகையே கொண்டு செல்ல வேண்டுமென்பதுடன் கிராம சேவையாளரின் அனுமதி பெறப்படவேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டது.

வீட்டு உரிமையாளர் பெருமளவில் விறகு கொண்டு செல்லவேண்டுமெனில் அனுமதி பெற்று பி.ப 4.00 மணிக்கு முன்பாக காரைநகரை விட்டு வெளியே கொண்டு செல்ல வேண்டும்; அதற்குபின்பே, இரவுவேளையிலோ எந்தவிறகும் கொண்டு செல்ல முடியாது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (உ-246)

## குடாநாட்டில் மேற்கொண்ட வேலைத்திட்ட விபரங்கள்; கோருகிறார் பிரதமர்

(கொழும்பு)

ஐக்கிய தேசிய முன்னணி அரசாங்கம் பதவியேற்ற பின்னர் யாழ். குடாநாட்டில் மேற்கொள்ளப்பட்ட வேலைத் திட்டங்கள் மற்றும் ஒதுக்கப்பட்ட நிதிகள் குறித்த அறிக்கையினை சமர்ப்பிக்குமாறு பிரதமரின் செயலாளர் பிரடமன் வீரக்கோன் அனைத்து அமைச்சுக்களின் செயலாளர்களையும் சுற்றறிக்கை மூலம் கோரியுள்ளார்.

பிரதமர் ரணில்விக்கிரமசிங்கவின்பணிப் புரைக்கமையவே மேற்படி கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அண்மையில் யாழ் குடாநாட்டுக்கு விஜயம் செய்திருந்த எதிர்க்கட்சித் தலைவர் மகிந்த ராஜபக்ஷ புதிய அரசாங்கம் ஆட்சிபீடமேறிய பின்னர் யாழ். குடாநாட்டில் எந்தவித அபிவிருத்தித் திட்டங்களும் முன்னெடுக்கப்படவில்லை என கொழும்பில் சுட்டிக்காட்டியமை குறிப்பிடத்தக்கது. (உ)

## தமிழ்ப் பாடசாலைகளின் கல்வி வீழ்ச்சிப் பாதையில்

(கொழும்பு)

இலங்கையின் தென் வடமேல், வடமத்திய மாகாணங்களில் உள்ள தமிழ் மொழிப் பாடசாலைகளின் கல்வி, வீழ்ச்சிப் பாதையை நோக்கிச் சென்று கொண்டிருப்பதாக புள்ளி விபரங்கள் தெரிவித்துள்ளன.

அகில இலங்கை இந்து மாமன்றம் மேற்கொண்ட ஆய்வுகளின் போதே இத்தகவல் வெளியாகியுள்ளது.

காலி மாவட்டத்தில் 10 தமிழ் பாடசாலைகளிலும் அனுராதபுர மாவட்டத்தில் அனைத்துப் பாடசாலைகளிலும் குருநாகலில் 4 பாடசாலைகளிலும் மற்றும் ஊவா, சப்பிரகமுவா மாகாணங்களில் உள்ள சில தமிழ்ப்பாடசாலைகளிலும் தமிழர்கள் அல்லாதவர்களே அதிபர்களாக கடமையாற்றுகின்றனர்.

அத்துடன், மேற்படி பாடசாலைகளில் தமிழ் மொழி; மற்றும் சைவசமயம் ஆகிய பாடங்களைக் கற்பிக்க ஆசிரியர்கள் இல்லை.

இதேவேளை, இது தொடர்பான கலந்துரையாடல் ஒன்றை மாகாண கல்வி முதல்வர்களுடன் நடத்த ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகவும் மேற்படி மாகாணங்களில் நிலவும் குறைபாடுகள்குறித்த கடிதம் ஒன்றை கல்வி அமைச்சிற்கு அனுப்பியுள்ளதாகவும் இந்து மன்றம் அறிவித்துள்ளது. (உ-10)

## யுத்த விரும்பிகள் ஒன்றிணைவது நாட்டை இக்கட்டிற்கு தள்ளும்

### எச்சரிக்கைத் தொனியில் தொழில் அமைச்சர்

(கொழும்பு)

யுத்தம் மூலமே இனப்பிரச்சினைக்கு தீர்வுகாணவேண்டும் எனக் கூறும்மக்கள் விடுதலை முன்னணியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஒன்றிணைந்தால் மீண்டும் ஒரு இக்கட்டான நிலையைத் தோற்றும் என தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இது அரசிற்கு மாத்திரமன்றி இவ்வாறு கூட்டுச் சேரும் கட்சிகளுக்கிடையேயும் நெருக்கடிகளை உண்டாக்கும், எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, மக்கள் விடுதலை முன்னணி மற்றும் பொதுஜன ஐக்கியமுன்னணி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி ஆகியன இணைந்து கொள்வது தொடர்பாக அக்கட்சிகளிடையே பல இரகசியக் கலந்துரையாடல்கள் நடைபெற்றுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## நிலக்கண்ணிவெடி கண்காணிப்பாளர் மாநாடு நேற்று ஆரம்பமானது

(கொழும்பு)

ஆசிய பசுபிக் பிராந்திய நிலக்கண்ணிவெடிக் கண்காணிப்பாளர்களின் மாநாடு நேற்றுக் கொழும்பு பைபிள் இல்லத்தில் ஆரம்பமானது.

தொடர்ந்து நான்கு நாட்கள் நடைபெறவுள்ள இம் மாநாட்டில், ஆசிய, பசுபிக் பிராந்தியங்களைச் சேர்ந்த 20 நாடுகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டுள்ளனர்.

சமயங்களுக்கிடையிலான சமாதான மன்றமும், நிலக்கண்ணி வெடி ஒழிப்பிற்கான தேசிய இயக்கமும் இணைந்து இம்மாநாட்டை நடத்துவதற்கு ஒழுங்குகளைச் செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இம்மாநாட்டில் இலங்கையில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி வெடிகளை அகற்றக் கோரி சுமார் 20 இலட்சம் பேர் கைச்சாத்திட்ட விண்ணப்பம் ஒன்றும் கொழும்பிலுள்ள ஐக்கிய நாடுகள் பிரதிநிதிகளிடம் கையளிக்கப்படவுள்ளது.

இம்மாநாடு முடிவடைந்ததும் இதில் கலந்து கொண்ட 20 நாடுகளின் பிரதிநிதிகளும் வன்னி, யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் நடைபெற்று வரும் நிலக்கண்ணி வெடிகளை அகற்றும் பணியினை பார்வையிடவுள்ளனர். (உ-8)

## சிறுவிளம்பரம்

### தேவை

மருந்து வேலை செய்ய உதவி ஆள் தேவை. சம்பளம் நேரில்பேசித தீர்மானிக்கப்படும். தொடர்பு:- வைத்திய கலாநிதி வே.குகமூர்த்தி, 259,நாவலா வீதி,யாழ்ப்பாணம்.T.P 222-2562 (C-5716)

### சஞ்சிகை

''உலகத் தமிழர் குரல்'' சஞ்சிகை மலர் வடிவில் வெளிவந்து விட்டது. ரூ 30/= அஞ்சல் மூலமாகவும் பெற்றுக் கொள்ளலாம்.பரமநாதன் இல்லம், மானிப்பாய்வீதி,தாவடி-கொக்குவில். (C-6496)

### மணமகள் தேவை

உயர் இந்து கௌரவ குடும்பம் சதயம், 8 செவ்வாய் (பாவம் குறைவு) 43 வயது. சொந்த நிறுவனம் நடத்திவரும் விவாகரத்துப் பெற்றவருக்கு தகுந்த மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படும். குறிப்பு உட்பட சகல விபரங்களுடனும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி: விளம்பர இல-342, மே/பா. வலம்புரி, யாழ்ப்பாணம். (6493)


# ஒட்டு மொத்தத் தொந்தரவுகளுக்கு ஒரு மருந்து ஹோமியோபதி ஒற்றைத் தலைவலிக்குகந்தது

நாம் அனைவரும் வாழ்க்கையில் ஒரு முறையாவது தலைவலியால் அவதிப்பட்டிருக்கக்கூடும். பொதுவாகத் தலைவலி வெயிலில் வேலை செய்தல், நீண்டதூரம் பயணம், தூக்கமின்மை போன்ற சாதாரண காரணங்களிலிருந்தும் மூளையில் கட்டி போன்ற சில முக்கியமான காரணங்களினாலும் ஏற்படுகிறது. தலைவலிகளில் ஒற்றைத்தலைவலி என்பது ஒரு தனிவகை.

## ஒற்றைத்தலைவலி

ஒற்றைத்தலைவலி என்பது தலையில் ஒருபக்கத்தில் மட்டும் குறிப்பாக வலது பக்கத்திலோ அல்லது இடது பக்கத்திலோ விட்டுவிட்டு ஏற்படும் தன்மையுடையது. இதனுடன் வாந்தி மற்றும் பார்வைக் கோளாறுகளும் சேர்ந்து வரும். இந்தநோய்ப் பாதிப்புக்கு உள்ளானவர்களுக்கு தலைவலி வருவதற்கு முன்பு ஒரு முன்னெச்சரிக்கை அறிகுறி தோன்றும். அது பாங்வைக் கோளாறு கண்ணுக்கு முன் மின்னல்கள் போன்ற வெளிச்சங்கள் தோன்றுதல், திடீரென அசாதாரண சுறுசுறுப்பு என ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாகத் தோன்றலாம்.சிறிது நேரத்தில் ஒற்றைத் தலைவலி வந்தவுடன் இந்த முன்னெச்சரிக்கை அறிகுறிகள் மறைந்து விடும். தலைவலி வந்த பின்பு வாந்தி, தலைச்சுற்றல், சிறிய வெளிச்சத்தைக் கூட பார்க்க முடியாமை, பேச்சுக் குளறுதல் போன்ற மற்ற சில தொந்தரவுகளும் ஒற்றைத் தலைவலியுடன் சேர்ந்து வரலாம் இந்த ஒற்றைத் தலைவலியின் போது அவர்களால் எந்த ஒரு வேலையையும் செய்ய முடியாமல் அவதிப்டுவர். அதிர்வு,இசை,சப்தம்,இலேசான வாசனைவெப்பம் போன்ற சிறு தூண்டுதலகளைக் கூட இவர்களால் தாங்கிக் கொள்ள முடியாது.

## ஒற்றைத்தலைவலிக்கான காரணங்கள்

ஒற்றைத்தலைவலி ஏன் ஏற்படுகிறது என்று பார்க்கும் போது அது இதனால் தான் ஏற்படுகிறது என்று திட்டவட்டமாகக் கூறும் அளவுக்கு எந்தக் காரணமும் கண்டு பிடிக்கப்படவில்லை. பொதுவாக ஒற்றைத் தலைவலியின் போது தலைக்குச் செல்லும் இரத்தக்குழாய்கள் திடீரெனச் சுருங்கிப் பின்பு அதிகமாக விரிவடைகிறது. இதனால் மூளைக்குச் செல்லும் இரத்த ஓட்டம் பாதிக்கப்பட்டு ஒற்றைத்தலைவலி மற்றும் கண்பார்வைக் கோளாறுகளை ஏற்படுத்துகின்றது. சில சமயங்களில் செரடோனின் வாசோ ஆக்டிவ் அமின்வேதிப் பொருள்களின் அளவு இரத்தத்தில் அதிகரிப்பதாலும் இந்த ஒற்றைத்தலைவலி ஏற்பட வாய்ப்பு உள்ளது.

## ஒற்றைத்தலைவலியைத் தவிர்க்கும் முறைகள்

ஒற்றைத்தலைவலி என்பது விட்டு விட்டு(EPISODIC) ஏற்படக்கூடிய ஒரு நோய்டெட்டனஸ்(ஏற்புவலி) ஹெபடைடிஸ்,தொண்டைஅடைப்பான் போன்ற சில நோய்களுக்குத் தடுப்பூசி இருப்பது போல் தலைவலி வராமல் தடுக்கத் தடுப்பு,சிகள் ஏதும் இல்லை. எனவே ஒரு முறை வந்தபின் அதை அடுத்த முறை வராமல் தடுப்பது எப்படி என்றும் குறைப்பது என்பது பற்றியும் தெரிந்து கொள்ள வேண்டும்.

ஒற்றைத்தலைவலி பற்றி நன்கு ஆராய்ந்து பார்த்தோமேயானால் ஏதோ ஒரு காரணத்தினால் தான் அது அடிக்கடி வரவழைக்கப்படுகிறது. அது என்ன என்பதைக்கண்டறிய வேண்டும்.அதற்கு ஒவ்வொரு முறை தலைவலியால் பாதிக்கப்படும் போதும் அதற்கு முன் தினத்திலிருந்து செய்த செயல்கள் சாப்பிட்ட உணவுகள் மனரீதியான பாதிப்புகள் போன்றவற்றை ஒரு குறிப்பேட்டில் குறித்து வைத்தால் கண்டு பிடித்து விடலாம். ஒற்றைத் தலைவலி வந்து விட்டால் பாதிக்கப் பட்டவர் ஒரு இருட்டறையில் படுக்கையில் தலையணை ஏதும் வைக்காமல் அமைதியாகப் படுக்க வேண்டும். தலையின் அடிப்பாகம், கழுத்துப் பகுதி, தோள்பட்டை போன்ற பகுதிகளில் மெதுவாகத் தடவிவிட வேண்டும். தலையின் பக்கவாட்டில் காதுகளுக்கு முன்பு மற்றும் மூக்கின் ஓரங்களில் விரல்களால் மெதுவாக அழுத்த வேண்டும். சிலருக்கு மனஉளைச்சல்கள், அலுவலக வேலைகள்

## மருத்துவ விளக்கம்

குடும்பப் பிரச்சினைகள்,கவலைகள், கோபம் போன்றவற்றினால் ஒற்றைத் தலைவலி அடிக்கடி ஏற்படுகிறது. இவர்கள் தமது கவலைகளை நண்பரிடம் அல்லது மருத்துவரிடம் மனம் விட்டுப் பேசி மனத்தின் பளுவைக் குறைக்கலாம். தியானம் மனதிற்குப் பிடித்தமான விஷயங்களில் மனதைத் திசை திருப்பித் தலைவலியைத் தவிர்க்கலாம்.

சிலருக்குக் காலம் தாழ்த்தி உணவு சாப்பிடும் போதெல்லாம் ஒற்றைத் தலைவலி வரும்.அப்படிப்பட்டவர்கள் சரியான நேரத்திற்குச் சாப்பிட வேண்டும். பார்வைக்குறைபாடு உள்ளவர்கள் கண்மருத்துவரைப் பார்த்துச் சோதனை செய்து கண் குறைபாட்டில் ஏதேனும் மாற்றம் ஏற்பட்டிருந்தால் அதைச் சரி செய்ய வேண்டும். அதிக வெளிச்சத்தைக் குறைக்கக் கறுப்புக் கண்ணாடி மற்றும் போலராய்டு கண்ணாடிகளைப் பயன்படுத்துவது நல்லது. கருத்தடை மாத்திரைகளைச் சாப்பிடுவதால் சில பெண்களுக்கு இந்தத் தலைவலி ஏற்படலாம். அப்படியானால் உடனே அதற்கான மாற்று முறையைப் பயன்படுத்த வேண்டும். உற்சாகப் பானங்கள், புகைப்பிடித்தல், சாக்லேட் போன்றவற்றைத் தவிர்த்து உடற்பயிற்சி, நீந்துதல், தியானம் போன்றவற்றைத் தொடர்ந்து கடைப் பிடிப்பதன் மூலம் ஒற்றைத் தலைவலியை வெகுவாகத் தவிர்க்கலாம்.

## முன்னெச்சரிக்கை

ஒற்றைத் தலைவலியால் அவதிப் பட்டுக் கொண்டிருக்கும் போது வாகனங்கள் ஓட்டுவதைக் கண்டிப்பாகத் தவிர்க்க வேண்டும். ஏனெனில் ஒற்றைத் தலைவலியின் போது ஏற்படும் பார்வைக் கோளாறுகள் காரணமாகத் தூரம் மற்றும் திசையைச் சரியாகக் கணக்கிட முடியாமல் போவதால் விபத்துக்கள் ஏற்பட அதிக வாய்ப்புகள் உள்ளன. மூளையில் கட்டிகள் மற்றும் இரத்தக்குழாயில் உறைந்த இரத்தம் (இரத்தக் கட்டிகள்) போன்றவற்றினால் கூட ஒற்றைத்தலைவலி ஏற்பட வாய்ப்புக்கள் உள்ளன. எனவே ஒரு மருத்துவரை அணுகி சோதனைகள் செய்ய வேண்டியது மிக அவசியம்.

பொதுவாக ஹோமியோபதி மருத்துவத்தில் நோயக்குச் சிகிச்சை அளிக்கப்படுகிறது என்பதை விட

**டாக்டர் ப.உ.லெனின் B.H.M.S**

நோயாளிக்கு சிகிச்சை அளிக்கப் படுகிறது என்று கூறுவதுதான் உண்மை. எந்த நோயாக இருந்தாலும் நோயாளியின் உடலில் இருக்கும் ஒட்டு மொத்த தொந்தரவுகளைச சேகரித்து பின்பு அனைத்துத் தொந்தரவுகளுக்கும் பொருந்தும் வகையில் ஒரு மருந்தைத் தெரிவு செய்து எடுக்கப்பட்டு நோயாளிக்குக் கொடுக்கப்படும். அப்போது மட்டுமே பூரண குணம் கிடைக்கிறது. இவ்வாறு சிகிச்சை அளிக்கப்படும் போது நோயாளி சில தொந்தரவுகளைக் கூறாமல் விடும்போது சரியான மருந்தைத் தெரிவு செய்வதில் கஷ்டம் ஏற்படுகிறது. எனவே நோயாளி அவர்களது அனைத்துத் தொந்தரவுகளையும் மறுக்காமலும், மறைக்காமலும் கூற வேண்டும்.

*மருத்துவஅறிவியல் மலர்ஜுன் 2001*

## நெல் கொள்வனவு விலை உயர்வு

(கொழும்பு)

நெல்லின் கொள்வனவு விலையை 50 சதவீதத்தால் அதிகரிப்பது என அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இதன்படி ஒரு கிலோ நெல்லின் விலை 13 ரூபாவாக கொள்வனவு செய்யப் படவுள்ளது.

இந்நடைமுறை அடுத்த அறுவடைக் காலத்தில் இருந்து அமுலுக்கு வரும். (உ-10)

## நாற்று விநியோகம்

(சுதுமலை)

மானிப்பாய் சுகாதார வைத்தியஅதிகாரி பிரிவில் உள்ள கல்வளைக் கிராமத்தில் போசாக்கு செயற்திட்டப் பயனாளிகளுக்கு கடந்தவாரம் வீட்டுத் தோட்டப் பயிர்ச்செய்கைக்கு ஏற்ற கத்தரி,கீரை,தக்காளி, மிளகாய், வெண்டி நாற்றுகள் மானிப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையினால் விநியோகிக்கப்பட்டது. (உ-252)

## ஏற்றுமதி வருமானம் 9 வீதத்தால் அதிகரிப்பு

(கொழும்பு)

கடந்த ஆண்டின் பிற்பகுதியில் நாட்டின் ஏற்றுமதி வருமானம் 9 சதவீதத்தால் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது தொடர்பாக மத்திய வங்கி விடுத்த அறிக்கை ஒன்றில், கடந்த 2001ஆம் ஆண்டு 34 கோடி 60 லட்சம் டொலரை ஏற்றுமதி வருமானமாக நாடு பெற்றது.

இந்நிலையில் கடந்த வருடம் 37 கோடி 80 லட்சம் டொலர்களை வருமானமாகப் பெற்றுள்ளது.

தைக்கப்பட்ட ஆடைகளின் ஏற்றுமதி கைத்தொழில் உற்பத்திப் பொருட்களின் ஏற்றுமதி என்பன பெருமளவு வருமானத்தை ஈட்டித்தந்துள்ளன.

இதேவேளை, இறக்குமதிக்கான செலவீனமும் 9 சதவீதத்தால் அதிகரிக்கப்பட்டுள்ளதாக மத்தியவங்கி சுட்டிக்காட்டியுள்ளது. (உ-10)

## நோயின் தாக்கம் குறைவடைவு

(கொழும்பு)

தேயிலைச் செடிகளில் ஏற்பட்டுள்ள பங்கசு நோய் காரணமாக பறிக்கப்படும் தேயிலைச் கொழுந்துகளின் அளவுகள் வெகுவாக குறைந்துள்ளதாக தேயிலைத் தோட்ட அதிகாரசபை தெரிவித்துள்ளது.

கடந்த சில காலங்களாக நிலவி வரும் பனிமூட்டம் காரணமாகவே இந்நோய் ஏற்பட்டுள்ளதாகவும் இந்நோயினால் பாதிக்கப்பட்ட தேயிலைச் செடிகள் சில நாட்களின் பின்னர் முற்றாக அழுகிவிடுவதாகவும் தெரிவிக்கப் படுகிறது. (உ-10)

## இடம்பெயர்ந்து வன்னியில் வசிப்போருக்கு வாழ்வு மேம்பாட்டுத் திட்டங்கள்

(கொழும்பு)

உள்நாட்டில் இடம்பெயர்ந்து வன்னிப் பிராந்தியத்தில் வாழ்பவர்களுக்கு தொழில் திறன்கள் மற்றும் தொழில வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்கான திட்டங்கள் 2003 ஆம் ஆண்டில் முன்னெடுக்கப்படவுள்ளன என்று வன்னி புனர்வாழ்வு அமைச்சின் செயலாளர் ஆர். தர்மகுலசிங்கம் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் மேலும் தெரிவிக்கையில்,

மூன்றாம் நிலைக்கல்வி அமைச்சுடன் கூட்டாக இது செயற்படுத்தவுள்ளது. தேசிய பயிலுநர் கைத்தொழிற் பயிற்சி அதிகாரசபை மற்றும் தொழிற்பயிற்சி அதிகாரசபை ஆகியவற்றின் அனுசரணையுடன் வன்னி மாவட்டத்திலும், புத்தளம் மாவட்டத்திலும் இத்திட்டம் நடைமுறைப் படுத்தப்படும்.

முதலில் புத்தளம் மாவட்டத்திலும் பின்னர் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் மன்னார், முல்லைத்தீவு, வவுனியா மாவட்டங்களிலும் தொழிற்பயிற்சி நிலையங்கள் ஏற்படுத்தப்படும்.

அமைச்சர் நூர்தீன் மசூரின் ஏற்பாட்டில் வாடகைக் கட்டடம் ஒன்றில் புத்தளத்தில் தொடக்கப்படும் பயிற்சி நிலையத்தில் இளைஞர்களுக்கு கணனி,மேசன், தச்சு, உருக்கு இணைப்பு ,மின்இணைப்பு, இயந்திரங்கள் திருத்துதல், முச்சக்கர வண்டிகள் ,மோட்டார் வண்டிகள் திருத்துதல் உழவியந்திரம், வெளியிணைப்பு இயந்திரம் போன்றவற்றின் திருத்த வேலைகள் தொடர்பான பயிற்சிகள் அளிக்கப்படும்.

அத்துடன், சுயவேலைவாய்ப்புத் திட்டங்களுக்கு நிதி உதவி வழங்குதல் மூலம், இளைஞர்கள் பெறும் பயிற்சியினால் அவர்கள் தொழில் வாய்ப்பைப் பெறமுடியும்.

வன்னிப்பகுதியில் 4 ஆயிரத்து 500 குடும்பங்களுக்கு அமைச்சு 100 மில்லியன் ரூபாவை கடந்த ஆண்டு செலவு செய்திருந்த்து என்றும் குறிப்பிட்டார். (உ)

## யுத்த நிறுத்த மீறல்கள் படிப்படியாக குறைகின்றன

### மட்டு க.கா. குழு தலைவர்

(மட்டக்களப்பு)

யுத்தநிறுத்த மீறல்சம்பவங்கள் தற்போது படிப்படியாகக் குறைந்து வருகிறது என மட்டக்களப்பு மாவட்ட போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் எல்கி.குல் ஹோாணன் தெரிவித்துள்ளார்.

வாழைச்சேனை இந்துக்கல்லூரியில் மட்டக்களப்பு கண் காணிப்புக் குழுவின் செயற்பாடுகள் தொடர்பான விளக்கமளிக்கும் கூட்டம் அண்மையில் இடம்பெற்ற போது இதனை தெரிவித்தார்,

இக்கூட்டத்தில் தொடர்ந்து கருத்துத் தெரிவித்த ஹோாணன்,

சிறுவர்களை யுத்த நடவடிக்கைகளில் ஈடுபடுத்தக் கூடாது என்ற சர்வதேச சட்ட விதிகளை யுத்தத்தில் ஈடுபடும் தரப்பினர்கள் அனைவரும் பின்பற்ற வேண்டும்.

அரசாங்கத்தாலும்,தமிழீழவிடுதலைப் புலிகளாலும் புரிந்துணர்வு உடன்படிக்கை கைச்சாத்தான சில மாதங்களில் யுத்தநிறுத்த மீறல் சம்பவங்கள் அதிகரித்து வந்தன.

யுத்த நிறுத்த மீறல் சம்பவம் ஒன்று நடைபெறும் போது அதனை விசாரித்து யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவின் தலைமை அலுவலகத்துக்கு அறிவிக்கப்படும்.

தலைமை அலுவலகம் நோர்வே அரசு மற்றும் அரசுதமிழீழவிடுதலைப் புலிகளுக்கும் இது குறித்து அறிவிக்கும் எனவும் குறிப்பிட்டார்.

இக்கூட்டத்தில் மட்டக்களப்பு மாவட்டக் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள், தமிழீழ விடுதலைப்புலிகளின் ஆண்டான் கோட்ட இராணுவத்தளபதி -ரெஜி, வாழைச்சேனை பொலிஸ் பொறுப்பதிகாரி பொடிமாத்தையா, இராணுவ மேஜர் பெடிபெரோ, வாழைச் சேனைப் பிரதேச செயலர், மதப் பெரியார்கள் ஆகியோர் கலந்து கொண்டனர். (உ-8)

## நிதி ஒதுக்கீடு

(சுதுமலை)

வலி. தென்மேற்கு மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட பகுதிகளின் இவ் வருடத்திற்கான அபிவிருத்தி வேலைகளுக்கென பிரமாண அடிப் படையிலான மூலதன நிதியில் இருந்து பணம் ஒதுக்கப்பட்டுள்ளது.

நவாலி தெற்கு வேலக்கை வீதி, சண்டிலிப்பாய் பழைய கராஜ் வீதி, சென் அன்ரனிஸ் சனசமூக நிலையம் ஆகியவற்றின் புனரமைப்பு மற்றும் காக்கைதீவு மாதிரிக்கிராம மின்சார விநியோகம் என்பவற்றுக்கே இந்நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. (உ-252)

## இராணுவத்தின் முக்கியத்துவம் குறைக்கப்பட மாட்டாது

### பாதுகாப்பு அமைச்சர் உரை

(கொழும்பு)

இருபது வருடகால யுத்தத்திற்கு முடிவு கட்டி நாட்டில் நிரந்தர சமாதானத்துக்கு முயற்சிகள் மேற் கொள்ளப்பட்டு வரும் இவ்வேளையில் இராணுவத்தினரின் முக்கியத்துவம் ஒரு போதும் பாதிக்கப்பட மாட்டாது என பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் நடைபெற்ற வறக்காப் பொலையில் வீதி அபிவிருத்தி நடவடிக்கை தொடர்பான கூட்டமொன்றில் உரையாற்றும் போதே பாதுகாப்பு அமைச்சர் திலக்மாரப்பன மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில்,

கடந்த அரசாங்க காலத்தில் பெற்றுக்கொள்ளப்பட்ட இராணுவத் தளபாடங்களுக்கான செல்மதிகளையே தற்போது அரசு செலுத்தி வருகிறது.

இத்தீவில் தற்போது யுத்தம் ஓய்திருப்பதினால் அதற்கு ஏற்படும் செலவீனத்தை அரசு இப்போது



மிச்சப்படுத்தி வருகிறது. எந்நிலையிலும் இராணுவத்தினரின் முக்கியத்துவமஒருபோதும். குறைக்கப்பட மாட்டாது என்றும் தெரிவித்தார்.(வ)

## இன்று ஒரு தகவல்

# நோன்பு நோய் போக்கும்!

ஒரு தேர். அந்தத் தேரில் ஐந்து குதிரைகள் பூட்டியிருக்கின்றன. அந்தத்தேர் போய்ச் சேர வேண்டிய இடத்திற்குப் பத்திரமாகப் போய்ச் சேரவேண்டுமென்றால், ஐந்து குதிரைகளும் ஒரே வேகத்திலே போக வேண்டும். ஒரே திசையில் போகவேண்டும். ஒவ்வொன்றும் ஒவ்வொரு திசையிலே போனாலும் ஆபத்து! ஒவ்வொன்றும் ஒவ்வொரு வேகத்திலே போனாலும் ஆபத்து. அதுசரி... எங்கே அந்தத் தேர் இருக்கிறது என்று கேட்கிறீகளா? நமது சரீரம் தான் அந்தத் தேர். ஐம்புலன்கள் என்று சொல்கிறோமே. மெய், வாய், கண், மூக்கு, செவி ஐந்துமே அந்த ஐந்து குதிரைகள். அந்த ஐந்தும் ஒரே திசையில் போகவேண்டும். அதை மறந்து விட்டு கை ஒன்று செய்ய, வாய் ஒன்று பேச. கண ஒன்று பார்க்க... இப்படி இருந்தால் வாழ்க்கை எதற்கு ஆகும்.

வாழ்க்கையை நெறிப்படுதத்துவதற்கான ஒரு முயற்சிதான் நோன்பு. உணணா நோன்பென்பது உலகம் பூராவும், எல்லா மதங்களும் ஏதோ ஒரு வகையிலே வலியுறுதத்க் கொண்டு வருகிற ஒரு விஷயம். இஸ்லாமும் இதை ஒரு முக்கிய கடமையாக வலியுறுத்துகிறது. புனித நோன்பு உணர்ச்சிகளை ஒரு கட்டுப் பாட்டுககுக் கொண்டுவருகிறது. ஆன்மாவைத் தூய்மைப்படுததி ஒளிரச் செய்கிறது. தொழுகைக்குச் சுவையளிக்கிறது. உடல் ஆரோக்கியத்தைப் பாதுகாப்பதற்கு மிகவும் உதவுகிறது. ஏழை எளியவர்கள், வறியவர்கள் மேல்அனுதாபம் கெள்ளக் கற்றுக் கொடுக்கிறது.

நோன்பு இருப்பதனாலே மருத்துவ ரீதியாகவே பல மாறுதல் கள் உடம்பில் ஏற்படுகிறது. இரத்த அழுத்தத்தை அது குறைகக'றதாம். இரத்தக் கட்டியைக் கரைக்கிற சக்தியை இரத்தத்தில் அதிகப்படுத்துகிறது. மையோ கார்டியல் இன்பிறாக்சன் (Myocardial Infraction) காரணமாக ஏற்படுகிற உயிரிழப்பு பாதியாகக் குறைகிறது. தண்ணீா பருகாமலிருக்கிறபோது பிட்யூட்டரி சுரப்பியின் பின்பகுதி Amti Diureti Harmoneஐ சுரக்கிறது. வெளியாகிற சிறு நீர் அளவை இது குறைத்துவிடும். அதனால் உடம்பிலே தண்ணீர் சேமிக்கப்படுகிறது. நோன்பு காலத்தில் இரத்தத்தில சர்க்கரை சீராக, ஒரே அளவாக இருக்கிறமாதிரியும் உடம்பு சரிசெய்து கொளக'றது. இதுமட்டு மில்லை இன்னும் எவ்வளவோ உடம்பினுள் சரிசெய்யப்படுகின்றன.

நோன்பென்றால்... சாப்பிடாமலிருப்பது, தண்ணீர் பருகாம லிருப்பது மட்டுமில்லை. உலக சுகங்கள் போகஙங்கள் வேண்டாம் என்று ஒதுக்குவது. மற்றவர்கள் மேல் அனுதாப உணர்வு வளர்வதற்கும், சகிப்புத்தன்மை, வளர்வதற்கும நோன்பு துணையாக இருக்கிறது! உலகத்தில் மனிதர்கள் ஒருவரை யொருவர் சரியாகப புரிந்து கொள்ளாததினாலேதான் பல விதமான பிரச்சினைகள் உண்டாகின்றன. மனிதனுக்கு நிம்மதி குறைவதற்கே இதுதான் முக்கியமான காரணம். பிரச்சினையைச் சரியாகப் புரிந்து கொள்கிறதிறமை நம்மிடம் இருந்தால் அதை உடனடியாக தாப்பதும் சுலபமாக இருக்கும்.

மனிதனை மனிதன் சரியாகப் புரிந்துகொள்கிற பழக்கத்தை ஏற்படுததிக்கொடுப்பது நோன்புதான். இந்த நோன்பு இறைவனுக்கு நாம் மிகவும் நெருக்கமாக இருக்கிறோம் என்கிற உணர்வை ஏற்படுத்துவது. இதுவரையும் நாம் பேசிக் கொண்டது இறைவன் மேல் நம்பிக்கை உள்ளவர்கள் கடைப்பிடிக்கிற நோன்பைப்பற்றி!

இவைகள் இருக்கட்டும். இறைவன் மேல் நம்பிக்கையே இல்லாத ஒருவன் சாப்பிடாமல் இருக்க வேண்டும் என்று ஆசைப்பட்ட கதை ஒன்று உங்களுக்கு தெரியுமா? அவரிடம் ஒருவர்... நமது வயிற்றை நிரப்புவது ஆண்டவன்தான் என்று சொன்னார். அது எப்படி... அவர் வந்து நிரப்புவார்...? நாம் தானே கையால் எடுத்து சாப்பிடவேண்டும் என்றான், இவன். அது மட்டுமில்லை. அதைச் சோதித்துப் பார்க்க வேண்டும என்றும் ஆசைப்பட்டான். உடனே மனைவியிடம போனான். கட்டுச்சோறு கட்டிக் கொடு என்றான். ஒரு பொட்டலம் கட்டி எடுததுக் கொண்டான். நேராக மனிதனே இல்லாத ஒரு பாலைவனத்துக்குப் போனான். ஒரு இடத்திலே உட்கார்ந்தான். சோற்றுப் பொட்டலத்தை முன்னால் வைத்தான்.

''நான் இதைக் கையால் தொடப் போவதில்லை. நானாகச் சாப்பிடாத பொழுது... ஆண்டவன் எப்படி என் வயிற்றை நிரபபுவார் பார்க்கலாம்'' என்றான். கையைக்கட்டிக்கொண்டு கண்ணை மூடிக்கொண்டு பேசாமல் உட்கார்ந்து கொண்டான் கொஞ்சநேரம் ஆயிற்று. அந்தப் பக்கமாக இரண்டு ஆசாமிகள் வந்தார்கள். அவர்களுக்கு அகோரப்பசி. இரண்டு பேரில் ஒருவன் அந்தப் பொட்டலத்தை எடுக்கப்போனான். இன்னொருவனுக்குச் சந்தேகம்.

''இவன் ஏன் பொட்டலத்தை வைத்துக்கொண்டு சாப்பிடாமல் உட்கார்ந்திருக்கிறான். ஒரு வேளை இதில் விஷம் கலந்திருக்குமோ?'' என்றான். இருந்தாலும் இருக்கும என்றான் இன்னொருவன். அந்த ஆளிடமே கேட்போமே என்று பேச்சுக் கொடுதது்ப் பார்த்தான். அந்த ஆள் பேசவே இல்லை. சந்தேகம் வலுத்தது. இரண்டு பேரும் அந்த ஆளை வலுக்கட்டாயமாகப் பிடித்துக்கொண்டு வாயிலே சாப்பாட்டை திணித்தார்கள். வேறு வழியில்லை... சாப்பிட்டு விட்டான். இப்பொழுது அந்த ஆளுக்கு வயிற்றை நிரப்பியது யார்? யோசித்துப் பாருங்கள்!

அதன் பின்னர்... அந்தப் பொட்டலத்திலிருந்தவை முழுவதையும அந்த இருவரும் காலிபண்ணி விட்டுப் போயவிட்டார்கள். இந்த ஆள் ஆச்சரியப்பட்டுப் போய் உட்கார்ந்திருந்தான். ''என்னப்பா இறைவனுடைய கருணையை நினைத்து ஆச்சரியப்பட்டுக் கொண்டிருக்கிறாயா?'' என்று அவனைப் பார்த்துக் கேட்டார் பழைய நண்பர். அதற்கு அவன் ''நான் இதை நினைத்து ஆச்சரியப்படவில்லை'' எப்போதும நான் கஷ்டப்பட்டுச் சாப்பிடுகிற எங்கள் வீட்டுச் சமயலை அவ்வளவு பிரியமாக அந்த இரண்டுபேரும் சாப்பிட்டார்களே அந்த அளவுக்கு அதிலே என்ன இருக்கிறது! அதை நினைத்துத்தான் திகைத்துப் போய் உட்கார்ந்திருக்கிறேன். என்றான்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# அரச வர்த்தக கூட்டுத்தாபன அதிகாரிகளின் சம்பளம் உயர்வு

(கொழும்பு)

அரச வர்த்தகக் கூட்டுத்தாபனங்கள், அதிகாரசபைகள், அரச உடமையாக்கப்பட்ட கம்பனிகள் ஆகியவற்றின் தலைவர்கள், நிறைவேற்று அதிகாரிகள் ஆகியோருக்குக் குறைந்தபட்சம் 5ஆயிரம் ரூபாவரை ஊதியம் உயர்த்தப்பட்டுள்ளது. நிதியமைச்சின இது குறித்த சுற்று நிரூபம் வெளியிடப்பட்டுள்ளது.

கூட்டுத்தாபனத் தலைவர் ஒருவரின கொடுப்பனவு இதனால், 40ஆயிரம், ரூபாவாகவும், நிறைவேற்று அதிகாரி ஒருவரின் கொடுப்பனவு 20ஆயிரம் ரூபாவாகவும் உடனடியாக உயரும விதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

முதலாம் தர நிறைவேற்றுப் பணிப்பாளர் ஒருவர் 30ஆயிரம் ரூபாவை இதன்மூலம் பெறுவார். இவ்வாறு மாதாந்தக் கொடுப்பனவு அதிகரிக்கத்தவறும் பட்சத்தில் திறமை வாய்ந்த உயர் அதிகாரிகள் நிறுவனங்களை விட்டு விலகுவதைத் தவிர்க்க முடியாமல் போய்விடும் என்று நிதியமைச்சின் அதிகாரியொருவர் இதுபற்றிக கருத்துத் தெரிவித்தார்.

இதேவேளை, அரச ஊழியர்களின் சம்பளங்களிலும் அதிகரிப்புச் செய்யப்பட விருக்கிறதென்றும், ஆனால் பொருளாதார வளர்ச்சி வீதத்தை தாம் உன்னிப்பாக அவதானித்து வருவதாகவும், அது திருப்தி தருவதாகவும் இருக்கும் பட்சத்தில் யூன்மாதத்தின் பின்னர் இது பற்றி முடிவு செய்யவிருப்பதாகவும் நிதியமைச்சர் சொக்ஸி கடந்தவாரம் தெரிவித்திருந்தார்.

இதேவேளை அரசாங்க சேவைத் தொழிற்சங்கங்கள் பெப்ரவரி மாத்தில் சம்பள உயர்வு கோரி வேலை நிறுதத் போராட்டத்தை தொடக்கப்போவதாக அறிவித்துள்ளன.

இதுகுறித்து கருத்து வெளியிட்ட அரசாங்க சேவை தொழிற்சங்கத் தலைவர் டபிள்யூ.எச்.பியசேன தெரிவிக்கையில், அரசாங்கம் யூன் மாதத்தில சம்பள உயாவு வழங்கும என்று நம்பமுடியாது. தாம் ஆட்சிக்கு வந்தால் 2ஆயிரம் ரூபா உயர்வு வழங்குவதாகக் கூறியதை அவர்கள் நிறைவேற்றவில்லை என்றார். (உ)

# ஈராக்கில் போர் ஆரம்பித்தால் இலங்கையில் பாரிய உணவுப்பஞ்சம்

### எச்சரிக்கின்றனர் பொருளாதார நிபுணர்கள்

(கொழும்பு)

ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுத்தால், இலங்கையில் பாரிய உணவு நெருக்கடி ஏற்படக்கூடும் எனவும், இதனைச் சமாளிப்பதற்குப் போதிய அத்தியாவசிய உணவுப் பொருட்களையும், எரிபொருட்களையும் சேமித்து வைக்க நடவடிக்கை எடுக்கவேண்டும்என பொருளாதார நிபுணர்கள் அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதுடன் எச்சரிக்கையும் விடுத்துள்ளனர்.

ஈராக்மீது அமெரிக்கா போர் தொடுக்கும் பட்சத்தில் கடல்மார்க்கமாக வரும் அத்தியாவசிய உணவுப் பொருட்களான அரிசி, மா, எரிபொருள் வகைகள் தடைப்பட நேரிடலாம்.

இதனால், நாடுபூராவும் உள்ள களஞ்சியங்களில் இப்பொருட்களை முன்கூட்டியே களஞ்சியப்படுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்.என்று அவர்கள் மேலும் தெரிவித்துள்ளனர்.

பொருளாதார நிபுணர்களின் இந்த ஆலோசனையின் பிரகாரம் அதற்குரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் அரசவட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (வ)

## இராசி பலன்

**28. 01. 2003**

**(தை 14, செவ்வாய்)**

**ஏகாதசி மு.இ 8.39வரை**
**கேட்டை பி.இ 2.56வரை**
**இராகுகாலம் 3.36-5.06**
**சுபநேரம் 11.06 - 12.06**

**சித்தாமிர்தம், ஏகாதசிவிரதம்**

**மேடம்**
எதிரிகள் தொல்லை, நிலைமாற்றம், போசனசுகம், மனச்சோர்வு.

**இடபம்**
அபூர்வ சந்திப்பு, மனமகிழ்ச்சி, எடுத்த காரியம் கைகூடும், பொருள் சேர்க்கை.

**மிதுனம்**
செய்தொழல் விருத்தி, அறிஞர் சந்திப்பு, முயற்சி கைகூடும், போசனசுகம்.

**கடகம்**
சொத்துக்களால் கவலை, மந்தநிலை, காரிய தாமதம், சிறுவியாதி.

**சிங்கம்**
சத்துருஜெயம், இனசனத்தொடர்பு, மனச்சஞ்சலம், முயற்சி தாமதம்.

**கன்னி**
பிரயாண நன்மை, தனலாபம், நல்லமுயற்சி, அன்னியர் சந்திப்பு,

**துலாம்**
தனநாசம். ரோகவிருத்தி, விவாதம், காரிய தாமதம்.

**விருச்சிகம்**
பெரியோர் ஆதரவு, தேகநலன், பொருள்சேர்க்கை, பாக்கியம்.

**தனுசு**
பிரயாண அலைச்சல், கண்வலி, வஞ்சகம், தனவிரயம்.

**மகரம்**
இஷ்டசித்தி, பயமின்மை, புகழ், தொழில் சிந்தை.

**கும்பம்**
அதிக பிரயாசை, நல்லசெய்தி, முயற்சிகைகூடும், மேன்மை.

**மீனம்**
நல்லமனைவாசம், காரியதாமதம், ரோகம், பிரயாணம்.

(பழையநேரப்படி கணிப்பிடப்பட்டது)

- [illegible]

# 1750 இலங்கையருக்கு விரைவில் நட்ட ஈடு

(கொழும்பு)

குவைத் யுத்தத்தால் பாதிக்கப்பட்ட ஆயிரத்து 750இலங்கையர்களுக்கு ஐக்கிய நாடுகளின் இழப்பீட்டு ஆணைக்குழு நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகள் வழங்கவுள்ளது.

ஐக்கிய நாடுகள் ஆணைக்குழு இவ் இழப்பீட்டுக் கொடுப்பனவுக்காக 650மில்லியன் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளது என தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

இதற்கமைய குவைத்தில் பணியாற்றிய பணியாளர்கள் ஒவ்வொருவருக்கும் தலா 4இலட்சம் ரூபா இழப்பீடாக வழங்கப்படவுள்ளது.

இக்கொடுப்பனவுகள் யாவும் ஒரு மாதகாலத்துக்குள் வழங்கப்படும்.

ஐக்கிய தேசியக்கட்சி கடந்த பொதுத்தேர்தலின் பிரசாரத்தின் போது வளைகுடா யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட அனைவருக்கும் நஷ்டஈட்டுக் கொடுப்பனவுகளைப் பெற்றுத தருவதாக உறுதி மொழி வழங்கியிருந்தது.

கட்சி தனது உறுதிமொழியை இதன்மூலம் நிறைவு செய்கிறது எனவும் அமைச்சர் தெரிவித்துள்ளார். (க-8)

# தொ. நு. கல்லூரி முன்பாக மாணவர்கள் மறியல்

(கொழும்பு)

மட்டக்களப்பு தொழில்நுட்பக் கல்லூரிக்கு முன்பாக நேற்றுக் காலை மாணவர்கள் மறியல் போராட்டத்தில் ஈடுப்பட்டனர்.

உயர்கல்வி அமைச்சின் கீழ் இயங்கும் உயர்தொழில்நுட்ப நிறுவன மட்டக்களப்பு வளாகம் கடந்த 10வருடங்களாக மட்டக்களப்புத் தொழில்நுட்பக கல்லூரியின் ஒரு பகுதியில் இயங்கி வருகிறது.

இதனை முழுமையான தனிநிறுவனமாக அமைத்து, புதிய கட்டடம் ஒன்றில் நடத்துமாறுகோரி உயர் தொழில்நுட்ப மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் இவ் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மட்டக்களப்புத் தொழில்நுட்பக் கல்லூரியின் ஒருபகுதியில்உயர் தொழில்நுட்பநிறுவனம் இயங்கி வருவதால், மாணவர்கள் பல சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

எனவே உயர்கல்வி அமைச்சு இதற்கான நடவடிக்கைகளை உடன் மேற்கொள்ள வேண்டும் என மாணவர்கள் கோரியுள்ளனர். (உ-8)

# இளைஞர் — யுவதிகளுக்கு வடகிழக்கில் புதியதிட்டங்கள்

(கொழும்பு)

வடக்கு-கிழக்கு இளைஞர்களுக்கென புதிய திட்டங்களை விரைவில் அறிமுகப்படுத்தவுள்ளதாக இளைஞர் விவகார விளையாட்டுத்துறை அமைச்சர் ஜோன்சன் பெர்னான்டோ தெரிவித்துள்ளார்.

அண்மையில் அம்பாறை மாவட்டத்தில் நடைபெற்ற அபிவிருத்தி சம்பந்தமான கூட்டம் ஒன்றிலேயே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்தும் பேசிய அமைச்சர், புனரமைப்பு நடவடிக்கைகளில் பல பிரச்சனைகள் ஏற்படுவதனால் இத்திட்டத்தினை விரைவில் அறிமுகம் செய்யவுள்ளேன்.

அத்துடன் சுகாதார அமைச்சர் பி.தயாரட்ணவின் ஆலோசனையுடன் அறிமுகமாகவுள்ள இத்திட்டத்தின் பணிகளை வடக்கு-கிழக்கில் உள்ள இளைஞர்கள் மேற்கொள்வர்கள் என்றார். (உ-10)

## அபிராமிப்பட்டர் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தில் எதிர்வரும முதலாம் திகதி சனிக்கிழமை பி.ப 3மணிக்கு அபிராமிப்பட்டர் விழா இடம்பெறவுள்ளது.

அன்றைய தினம் விசேட பூசை, அபிராமி அந்தாதி ஓதலும், பட்டர் எழுந்திருக்கும் உற்சவம் பட்டருக்கு அம்பாள் காட்சி கொடுத்தல், பூரணை நிலவுத் தரிசனம், வசந்த மண்டபப் பூசை, அம்பாளுடன் அபிராமிப்பட்டர் திருவீதியுலா வருதல், அர்த்தசாமப்பூஜை ஆகியன இடம்பெறவுள்ளன. (உ)

குற்றமே காக்க பொருளாகக் குற்றமே அற்றம்தரூஉம் பகை —குறள்—

# வலம்புரி

## தேர்தல் அறிகுறி

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் ஜே.வி.பி கூட்டுச் சேர்வதற்கான ஆயத்தங்கள் மிக வேகமாக நடந்து கொண்டிருக்கிறது.இதற்கான பேச்சு வார்த்தைகள் பகிரங்கமாக நடைபெறுகின்றன.

ஒரு காலத்தில் ஆயிரக் கணக்கான அப்பாவிச் சிங்கள இளைஞர்களின் மரணத்திற்கு காரணமாக இருந்த ஜே.வி.பியுடன் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா தலைமையிலான ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சி கூட்டுச் சேர்கின்றதெனில் அதற்குள் இருக்கக் கூடிய மிகப் பெரிய காரணம், ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கவிழ்ப்பதேயாகும்.

சுதந்திரக் கட்சியின் தலைவராக இருந்த காலம்சென்ற முன்னாள் பிரதமர் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா பிரதமராக இருந்தபோதே ஜே.வி.பி. சேகுவேராப் புரட்சியை நாட்டில் ஏற்படுத்தியது.ஜே.வி.பியின் மிகப் பெரும் பயங்கரவாதப் புரட்சி ஸ்ரீமாவோ பண்டார நாயக்காவின் ஆட்சிக்கும்,கட்சிக்கும் பெரும் அவகௌரவத்தையும் வீழ்ச்சியையும் ஏற்படுத்தியது என்பது வரலாற்று நிஜம்.

நிலைமை இவ்வாறிருக்கும் போது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஜே.வி.பியும் கூட்டுச் சேருவதற்கான முயற்சிகள் தற்போது நடைபெறுவது நாட்டின் ஆரோக்கியத்திற்கு உகந்ததல்ல.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவை பொறுத்த வரை ஐக்கிய தேசிய முன்னணி அரசை பதவி நீக்கி தனது சபதத்தை நிறைவேற்றுவதே இலக்கு. ஜே.வி.பியைப் பொறுத்தவரை விடுதலைப் புலிகளுடன் அரசு மேற்கொண்டு வரும் சமாதான முயற்சிகளை குழப்புவதே நோக்கம். எனவே ஆட்சியை மாற்றும் நோக்கம் கொண்ட ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும்,சமாதானப் பேச்சை குழப்பும் நோக்கம் கொண்ட ஜே.வி.பியும் கூட்டுச் சேர்ந்தால் அதன் விளைவு இரண்டாக இருக்கமுடியும்.அதில் ஒன்று ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைத்து பொது ஜன ஐக்கிய முன்னணி ஆட்சி அமைத்தல்; மற்றையது ஜனாதிபதி தனக்கு இருக்கக்கூடிய நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி ஐக்கிய தேசிய முன்னணி அரசைக் கலைத்து பொதுத் தேர்தலை நடத்துவது.

மேற் கூறப்பட்ட இரண்டில் ஒன்றை நடைமுறைப் படுததுவதற்கான முன் ஆயத்த முயற்சியே ஜே.வி.பியுடன் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செய்து கொள்ளவிருக்கும் கூட்டுச் சேரும் ஒப்பந்தமாகும்.

இத்தகையதொரு ஒப்பந்தம் ஏற்படுமாயின் அது தென்னிலஙகை இனவாதிகளுக்குப் பெரும் சாதகமாக இருக்கும் என்பது மறுக்க முடியாத உண்மை. இத்தகையதொரு கூட்டு முயற்சிக்கு பௌத்த பீடாதிபதிகளின் ஆசியும் ஆதரவும் கிடைக்கும் என்பதும் வேறுவிடயம்.

எனவே,இலங்கையின் இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவேண்டுமாயின் இனவாதிகளின் கூட்டுக்களை உடைத்தெறிவது அத்தியாவசியமானதாகும்.

# தமிழரின் விடிவுக்காக செத்துமடிய விடுதலைப்புலிகள் எந்நேரமும் தயார்!

## சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவு பிரமுகர் உரை

(தென்மராட்சி)

படைபலம் எம்மிடம் இருக்கும் வரை எம்மை இனியும் ஏமாற்ற முடியாது. தமிழனை யாரும் இனித் தொடக்கூட முடியாது. சுதந்திரத்திற்காக எந்த நேரத்திலும், எப்போதும் செத்து மடியத் தயாராகவே தமிழீழ விடுதலைப் புலிகள் இருக்கின்றார்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சாள்ஸ் அன்ரனி சிறப்புப் படையணியைச் சேர்ந்த அமிர்தாப், நேற்று முன் தினம் சாவகச்சேரி டிறிபேக் கல்லூரியில் இடம் பெற்ற கைத் தொழில் வணிகர் மன்றத்தின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் சிறப்புரையாற்றும் போது இவ்வாறு குறிப்பிட்டார்.

மன்றத்தலைவர் பீ.என்.சற்குணராஜா தலைமையில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அமிர்தாப் தொடர்ந்து உரையாற்றும் போது,

இன்றைக்கு இந்த மக்களுக்கு எப்படி உரிமையைப் பெற்றுக் கொடுப்பது என எமது தலைவர் மட்டும் தான் சிந்தித்துக் கொண்டிருக்கிறார்.

இன்று இச் சமாதான காலத்தில் எமது தலைவரை எப்படி அழிப்பது- இந்த விடுதலைப் போராட்டத்தை எப்படி நசுக்குவது- இந்த மக்களுடைய உரிமைப் போரை எப்படி இல்லாமல் செய்வது என்று எத்தனை நாடுகள் திட்டங்கள் போட்டுக்கொண்டிருக்கின்றன என்பது எங்களுக்குத் தெரியும்.

யுத்தம் மிகக் கொடுமையானது. சண்டை, சமர், போர்,யுத்தம் என்பவை வர்ணிக்க முடியாதவை. நாம் யுத்தத்தை விரும்பவில்லை. இந்த மண்ணில் அழிவில்லா வகையில் தமிழன் தமிழனாக வாழ வேண்டும். சமாதானத்தை நாம் ஏற்றுக்கொள்கின்றோம். எமது மக்களுக்கு சரியான ஒரு தீர்வுடன் உரிய உரிமைகளை அரசாங்கம் தருமாயின் யுத்தத்தைக் கைவிட நாம் தயாராக இருக்கின்றோம்.

யுத்தத்தை வெற்றிபெற முடியாது. யுத்தத்தைப் போல மிகக் கொடியதை உலகத்தில் காண முடியாது. எமது மக்களுடைய பாதுகாப்பு -உரிமை- சுதந்திரமான வாழ்வுக்கு யுத்தம் தான் ஒரேவழி என்று சொன்னால்- ஏற்றுக் கொள்ள நாம் தயாராக இருக்கிறோம்.

இன்று இந்த நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதில் ஆர்வப் பட்டிருக்கும் சர்வதேச உலகம் எமது மக்கள் சாக்கடைப் புழுக்களாக மடிந்த போது; தமிழன் செத்து மடிந்த போது- தமிழன் இந்த மண்ணில் நாயிலும் கேவலமாக மதிக்கப்பட்ட போது, இந்த சர்வதேசம் எங்கே போனது? இந்த யுத்தத்தில் நாம் 17 ஆயிரத்து 655 போராளிகளை இழந்துள்ளோம். ஒட்டுமொத் தமாகப் பார்க்கும் போது 97 ஆயிரம் முதல் ஒரு இலட்சம் பேர் வரை இப்போராட்டத்தில் செத்து மடிந்துள்ளனர் என்று குறிப்பிட்டார்.

மேலும், 83 வருடம் நாம் தமிழ் உரிமைக்காகப்போராடி வந்துள்ளோம். உரிமைகள் கிடைத்தனவா? இலங்கை அரசாங்கம் உரிமையைத் தந்ததா? எனக் கேள்வியெழுப்பினார்.

இக்கூட்டத்தில் தென்மராட்சி மக்கள் சேவைகள் சங்கத்தைச் சேர்ந்த இ.ஜெயக்குமார், நகரசபைச் செயலாளர் எம்.எஸ்.சரவணபவ. வைத்திய அதிகாரி எஸ்.அம்பிகை பாகன், கூட்டுறவுச சங்கத் தலைவர் கே.பாலச்சந்திரன், கிராம சேவையாளர் ஆர்.இராஜரத்தினம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

நிகழ்வில் அமரர் நமசிவாயம் நினைவு புலமைப் பரிசில் திட்டக் கொடுப்பனவுகள், தென்மராட்சிப் பிரதேசத்தைச் சேர்ந்த ஒன்பது மாணவர்களுக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டன. (உ-77)

## பாதுகாப்பு வழங்க ரவிராஜ் முன்வருகை

(யாழ்ப்பாணம்)

நாளை கொழும்பில் நடைபெறவுள்ள மிருசுவில் படுகொலை தொடர்பான வழக்கு விசாரணைக்காக அங்கு செல்லவுள்ள கொல்லப்பட்டவர்களின் உறவினர்களுக்கும், சாட்சிகளுக்கும் தங்குமிட வசதிகள் மற்றும் பாதுகாப்பு என்பவற்றை செய்து கொடுக்க யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் என்.ரவிராஜ் முன்வந்துள்ளார். (உ)

## சமாதான எதிர்ப்புப்பணியில் பொலிஸார்-பிக்குகள் கூட்டு

(திருகோணமலை)

திருகோணமலை கந்தளாய் பகுதியில் பௌத்த குருமார்கள் சிலர் பொலிஸாருடன் இணைந்து சமாதானத்திற்கு எதிரான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு முன்னாள் கந்தளாய் பிரதேச சபைத் தலைவர் ரட்ணம் பண்டார நேற்று முன்தினம் திருகோணமலையில் நடைபெற்ற சமாதான முன்னெடுப்பு பற்றிய கருத்தரங்கில் சுட்டிக்காட்டியுள்ளார்.

இது தொடர்பாக அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

பதவி சிறீபுர என்ற பிரதேசத்திலும் ஊர்காவற்படை உறுப்பினர்கள் சிலர் சமாதான நடவடிக்கைகளை குழப்பி வருகின்றனர் என்றும் குறிப்பிட்டார். (உ-10)

## இலங்கையின் சுதந்திர தின கொண்டாட்டம் இந்தியாவிலும்

(கொழும்பு)

ஸ்ரீலங்கா மகாபோதி சங்கம் இலங்கையின் சுதந்திர தினத்தை சென்னையில் வெகு விமர்சையாக கொண்டாட ஏற்பாடு செய்துள்ளது.

இலங்கை சுதந்திர தினத்தன்று ஸ்ரீலங்கா மகாபோதி சங்கத்தின சென்னைக்கிளை அலுவலகத்தில் இலங்கை மக்களுக்கு உடைகளையும், உணவுப் பொருட்களையும் வழங்கவும் சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர். (உ-8)

## குடும்பஸ்தரான தொழிலாளிக்கு அதிரடிப்படை அச்சுறுத்தல்

(பொத்துவில்)

அம்பாறை மாவட்டம் அதிரடிப்படை விசேட முகாம் பொறுப்பதிகாரி ஜெயகாந்தவினால், தான் கடந்த சில தினங்களுக்கு முன் இரவு வேளையில் மிரட்டலுக்கும் அச்சுறுத்தலுக்கும் உள்ளாகி வருவதாக சந்திரநேரு அரியநாயகம் எம்.பியிடம் மூன்று பிள்ளைகளின் தந்தையான முருகுப்பிள்ளை சொக்கலிங்கம் என்பவர் முறைப்பாடு செய்துள்ளார்.

அம்பாறை மாவட்டம் கனகர் கிராமம் ஊறணி பொத்துவிலைச் சேர்ந்த கூலித் தொழிலாளியான முருகுப்பிள்ளை சொக்கலிங்கம், விடுதலைப் புலிகளின் தீவிர ஆதரவாளர் என்றும், அவர்களுக்குப் பணம் கொடுத்து வருபவர் என்றும் கூறியே அம்பாறை விசேட அதிரடிப்படை முகாம் பொறுப்பதிகாரி மிரட்டிவருவதாக சந்திரநேரு எம்.பி விசேட அதிரடிப்படை பொறுப்பதிகாரிக்கு இது தொடர்பில் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

அத்துடன் பிரஸ்தாப நபருக்கு பாதுகாப்பு வழங்குமாறும் கோரியுள்ளார். (வ)

## கேரதீவு - சங்குப்பிட்டி பாதையைத் திறந்து விடுக ஒஸ்ரின் பணிப்புரை

(கொழும்பு)

கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதையை திறப்பது குறித்து பரிசீலிக்குமாறு பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ இராணுவ உயர் அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

எதிர்வரும் சிவராத்திரி தினத்திற்கு முன் மக்களின் போக்குவரத்திற்கு அனுமதிக்குமாறு இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் கோரிக்கை விடுத்ததையடுத்தே இப்பணிப் புரை விடுக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

மன்னார் திருக்கேதீஸ்வரம் ஆலயத்திற்கு இம்முறை யாழ்ப்பாணத்திலிருந்து பெருமளவு பக்தர்கள் சிவராத்திரி நிகழ்வுக்குச் செல்லவுள்ளதாகவும், இவர்களின் பயணச் செலவு, பயண நேரம் என்பவற்றைக் குறைத்துக் கொள்ளும் நோக் குடன் கேரதீவு-சங்குப்பிட்டிப் பாதையை திறந்து போக்குவரத்திற்கு வழி செய்யுமாறு அமைச்சர் மகேஸ்வரன் பாது காப்பு அமைச்சரைக் கேட்டிருந்தார்.

இதேவேளை, தற்போது கேதீஸ்வரத்திற்கு செல்வதாயின் வவுனியாவிலிருந்தே செல்ல வேண்டியுள்ளது. (ந-5)

## பின்தங்கிய பிரதேசங்களின் அபிவிருத்திக்கு விசேட திட்டம்

(கொழும்பு)

பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கு விசேட திட்டமொன்றை நடைமுறைப் படுத்த சமுர்த்தி அமைச்சு நடவடிக்கை எடுத்துள்ளது.

குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கைத் தரத்தை அபிவிருத்தி செய்வதை நோக்கமாகக் கொண்ட இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்க 150 தனியார் முதலீட்டாளர்கள் முன்வந்துள்ளனர்.

அதேவேளை,இத்திட்டத்தின் படி சமூக அபிவிருத்தி, விவசாயம், கைத்தொழில், உட்கட்டமைப்பு, மேம்பாடு என்பவற்றில் முக்கிய கவனம் எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்படுகிறது. (உ-10)

## தினசரி தியானம் விதி

காரணம் இருந்தால் காரியமும் உண்டு. இதற்குக் காரண காரிய விதி என்று பெயர். ஒவ்வொரு சம்பவமும் இதை அனுசரித்தே நடந்தாக வேண்டும். ஏனென்றால் இவ்விதியும், இவ்விதியை ஏற்படுத்திய பரமாத்தமாவும் ஒன்றே. இவ்விதி மிகவும் மர்மமானது. இது பற்றியே கிருஷ்ண பகவான் சொல்கிறார், ''கர்மத்தின் போக்கு அறிவதற்கரியது. இயற்கையிலுள்ள மனோ சக்திகளும், ஜடசக்திகளும் இப்பெரும் விதிக்கு உட்பட்டே இருக்கின்றன"

இந்த விதியை ஏற்படுத்திய பரமாத்மாவோடு ஒன்றிவிடுவாய். இவ்விதி உன்னைப் பாதிக்காது. அப்போது நீ இயற்கையை வென்றிடுவாய்.

சுவாமி சிவானந்தர்

## இந்திய மீனவர்களின் அடாவடிக்கு எதிராக அகிம்சைப் போருக்கு முஸ்தபு

(திருநெல்வேலி)

வடமராட்சியின் பொலிகண்டிக் கடற்பரப்பில் நேற்று முன்தினம் இரவு றோலர்களில் புகுந்த சுமார் 50 வரையான இந்திய மீனவர்கள் வடமராட்சிக் கடற்றொழிலாளர்களின் உபகரணங்களை நாசமாக்கியதுடன், அபகரித்தும் சென்றுள்ளனர்.

இது குறித்து வடமராட்சி கடற்றொழிலாளர் சமாசத்தில் பாதிக்கப்பட்ட மீனவர்கள் முறைப்பாடு செய்துள்ளனர்.

இதேவேளை, இந்திய மீனவர்களின் இத்தகைய அடாவடித்தனங்களுக்கு எதிராக விரைவில் அகிம்சை வழியில் போராட்டம் நடத்தவுள்ளதாகவும்,

இது விடயம் குறித்து ஏற்கனவே பல தடவைகள் பிரதமர் மற்றும் பாதுகாப்பு அமைச்சர் ஆகியோரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்ட போதும் எவ்வித ஆக்க பூர்வமான நடவடிக் கைகளும எடுக்கப்படவில்லை எனவும் வடமராட்சிக் கடற்றொழிலாளர் சமாசச் செயலாளர் எஸ்.சூரியகுமார் தெரிவித்துள்ளார். (உ-43)

## இளம்யுவதி சடலமாக மீட்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு ஆறுமுகத்தான குடியிருப்புப் பகுதியில் கழுத்தில் வெட்டுக்காயங்களுடன் இளம் யுவதி ஒருவா சடலமாக மீகப்பட்டு ள்ளார்.

மட்டக்களப்பு சங்குவேலியைச சேர்ந்த விநாயகமூர்த்தி தயாமதி (வயது-17)என்ற இளம்யுவதியே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட வராவார். (ந-5)

## முஸ்லிம்....

நேற்றைய தினம் மரக்கறி பறிப்பதற்காக தோட்டத்துக்கு சென்ற பிரஸ்தாபப் பெண் நண்பகல் வரை வீடு திரும்பா ததையடுத்து உறவினர்கள தேடிச்சென்ற போது அவர் வெட்டப்பட்ட நிலையில் இரத்த

## மாணவர்களுக்கான கருத்தரங்கு

2002 டிசம்பர் மாதத்தில் நடை பெற்ற க.பொ.த (சாதாரண தர) பரீட்சைக்குத் தோற்றிய மாணவர் களின் நன்மைகருதி உயர் கல்வி கற்கைநெறித் தெரிவுக்கான வழி காட்டல் கருத்தரங்கு ஒன்றினை யாழ்.மாவடடக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

இக்கருத்தரங்கு இன்று செவ்வாய்க் கிழமை காலை 10.00மணிக்கு கொக்குவில் இந்துக் கல்லூரி மண்டபத்தில் இடம் பெறும்.

---

வெள்ளத்தில் இறந்து கிடந்தார்

மா்மமான முறையில் கொலை செய்யப்பட்ட பெண்ணின் பெயர் நிலீரா (வயது 35) என்றும் கணவன மன்னார் பொலிஸில் கடமை ஆற்றுபவர் என்றும் தெரிவிக்கபபட்டுள்ளது.

இக்கொலை சம்மந்தமான புலன் விசாரனைகளை மன்னார் பொலிஸார் மேற்[illegible]ண்டு வருகின்றனர். (வ)

## பொலிஸார்....

தமக்கும் தொடர்பில்லையென விடுதலைப்புலிகள் கண்காணிப் புக்குழுவிற்கு அறிவித்தனர் இதனையடுத்து அதனை அகற்றுமாறு அமைச்சர் மிலிந்த பொலிஸாருக்கு உத்தரவிட்டிருந்தார்.

இதனை அடுத்து பெயர்ப் பலகையைஅகற்றியபொலிஸார் உழவுஇயந்திரத்தில் அதனை ஏற்றிச்சென்றனர். இதனால் ஆத்திரமடைந்த மக்கள் உழவு இயந்திரத்தை தடுத்து நிறுத்தி பெயர் பலகையை தருமாறுகோரி ஆர்ப் பாட்டம செய்த போது நிலைமை கட்டுமீறவே யுத்த நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் வரவழைக்கப்பட்டனர்.அவர்கள் பெயர் பலகையை பொலிஸாரிடம இருந்து பெற்று பொதுமக்களிடம் கொடுத்தனர்.

இதனையடுத்து நிலைமை கட்டுக்குள் கொண்டுவரபபட்டது (வ )

## தேர்தலை....

சேர்ந்து சமஷ்டி அமைப்பு முறை குறித்து அறிந்து கொள் வதற்காக பெல்ஜியம், இத்தாலி ஒஸ்ரியா ஆகிய நாடுகளுக்கு சென்றிருந்தோம் அந்த நாடு களில் நடைமுறைப்படுத்தப்படும் சமஷ்டி முறை இலங்கையிலும அமுல்படுத்தப்பட்டால் மூவின மக்களும் அதிகாரப்பகிர்வின்கீழ் சமஉரிமை வழங்கப்படும்.

இத்தகைய சம உரிமையை அமுல்படுத்துவதற்கு சகல எம்.பிக்களும் இணக்கம் தெரிவித்துள்ளனர் இதற்குப் பாராளுமன்றத்தில மூன்றில் இரண்டு பெரும்பான்மை தேவைப்படுவதால பொதுஜன ஐக்கிய முன்னணி, ஜே.வி.பி ஆகியோரின் ஆதரவும் தேவை:

இந்நிலையில் விடுதலைப் புலிகள் எதிர்பார்க்கும் சமஷ்டி எத்தகையது என்பது எங்களுக்குத் தெரியாது. எனினும நாங்களசென்ற நாடுகளில் பெல்ஜியம் நாட்டின சமஷ்டி முறையே இலங்கைக்கு பொருத்தமென நம்புகிறோம் இங்கு மிகச்சிறுபான்மையாக உள்ள மக்களும் சம உரிமையோடு வாழ்கிறார்கள் என்றும் றிசார்த் பதியுதீன் தெரிவித்துள்ளார்(வ)

## துறையூரில் ஈ.பி.டி.பி. வெளியேறியது

(ஊர்காவற்றுறை)

வேலணை துறையூரில் முகா மிட்டிருந்த ஈ.பி.டி.பியினர் அதிலி ருந்து வெளியேறியுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சனிக்கிழமை அலுவல கத்தை மூடி அங்கிருந்து வேறு இடத்திற்குச் சென்றுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.(ந-75)

## கந்தன் கருணை அறிமுக விழா

(யாழ்ப்பாணம்)

தேசிய கலை இலக்கியப் பேரவையின் நூறாவது! நூல் வெளியீடான கந்தன் கருணை நாடக நூல் அறிமுக விழா இன்று மாலை 4மணிக்கு கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் கவிஞர் கலாநிதி இ.முருகையன் தலைமையில் நடைபெறவுள்ளது (ந-5)

## இலங்கையில்..

உட்கட்டமைப்பு வசதிகளை ஏற்படுததுவதற்கு சுவிஸ்நாட்டின தனியார் துறையினரின் பங்களிபபை வழங்க வேண்டுமென்று அமைச்சா பீரிஸ் கேட்டுக்கொண்டார்.

சுவிஸ் வெளியுறவு அமைச்சராக பதவியேற்றவுடன தான் சந்திக்கும் முதலாவது வெளிநாட்டொன்றின் அமைச்சர் திரு. பீரிஸ் அவர்களே என்று குறிப்பிட்ட திருமதி மிச்சிலின் சுவிஸ் நாடு மிகவும் நெருக்கமான நல்லுறவுகளை இலங்கையுடன் பேணி வருவதாகவும் தொடர்ந்தும் அது பேணப்படும் எனவும் உறுதி யளித்தார் (ந)

## காவல்துறை....

தீர்வு காணப்படும் போது படைத்துறை, நீதித்துறை ஆகியன இரண்டும் ஒரே அமைப்பின் கீழ் இயங்கும். காவல்துறை மட்டும், வித்தியா சமான கட்டமைப்பு ஒன்றின்கீழ் இயங்கும் என்றும அமைச்சர் பீரிஸ் தெரிவித்தார்.

அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே நடை பெறும் பேச்சுவார்த்தைகளின் போது விடுதலைப்புலிகள் கூறுவதற கெல்லாம் அரசு இணங்கிப போவதாகவும், பேச்சு வார்த்தைகள் முறிந்து விடுமென்று கூறுவதும் வெறும் புரளிகள் என்றும் அவர் விளக்கம் அளித்தார். (ம)

## ஒரு குற்றச்சாட்டில் நெடுமாறனுக்கு விடுதலை கிடைத்தது

(சென்னை)

விடுதலைப்புலிகளிற்கு ஆதர வாகப் பேசியதாகக் கூறப்பட்ட குற்றச்சாட்டிலிருந்து தமிழ் தேசிய இயக்கத் தலைவர் பழநெடுமாறன் நேற்று விடுதலை செய்யப்பட்டார்.

எனினும் போடாச்சட்டம் உட் பட பல்வேறு வழக்குகள் நிலுவையில உள்ளதால் தொடர்ந்தும் அவர் சிறையில் இருப்பார் என தெரிவிக்கப் படுகின்றது.

விடுதலைப்புலிகளிற்கு ஆதர வாகப்பேசினார் என்ற குற்றச் சாட்டிற்குப்போதிய ஆதாரங்கள் நீருபிக்கப்படாத தாலேயே அவர் அவ் வழக்கிலிருந்து விடுதலை செய்யப்பட்டுள்ளதாக திருச் செந்துார் நீதிமன்ற நீதிபதி தெரிவித்துள்ளார். (ந-5)

## புலிகள்..

அதிபர் ரி.ஆனந்தராஜா ஆகியோருக்கு அனுப்பிவைத்துள்ள கடிதத்தில் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

கடந்த காலங்களில் சிறுவர்கள கடத்திச் செல்லப்பட்டமை தொடர் பாகக் கிடைத்த முறைப்பாட்டைய டுத்தே இந்தத் தீர்மானங்களை ஜனா திபதி செயலகம் தெரிவித்துள்ளது.

சிறுவர்களைக் கடத்திச் செல்வது தொடர்பான அறிக்கையை ஒருவார காலத்தினுள் தனக்குச் சமர்ப்பிக்கு மாறு இராணுவத்தினருக்கும் பொலி ஸாருக்கும் ஜனாதிபதி உத்தரவிட் டுள்ளார்.

இதேவேளை சிறுவர்கள் கடத் தப்படுவது தொடர்பன விடயம் உள் துறை அமைச்ர் ஜோன் அமரதுங காவின் கவனத்திற்கும் கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படு கிறது. (ந-5)

## உதயன் பத்திரிகை....

வில்லை ஆயினும் சமூகப் பொறு ப்புள்ளவர்கள் கவனத்தில் எடுக்க வேணடும் என்ற பத்திரிகையின் நோக் கத்திற்கு அமைவாக நாம் இது தொடர்பாகஆராய்ந்து அறிந்தவகையல இச்சம்பவம் நடைபெற்றது எனபதை உறுதிப்படுத்த முடியவில்லை.

பல்கலைக் கழகத்தில் மாணவர் கள் பகிடிவதை புரிவதை எந்தவொரு சமூக நலன் விரும்பியும் ஏற்றுக்கொள் மாட்டார்கள் இந்த வகையில பல்கலைக் கழக மாணவர் ஒன்றி யமும் நிர்வாகமும்,பகிடிவதைக்கு எதிராக தீர்மானத்தை வெளியிட்டு துணிவுடன் நடவடிக்கை எடுக்க முன் நிற்பது முற்போக்கான ஆரோக்கிய மான முன்னுதாரணமான செயற்பா டாகும் அதே நேரம் சமூக அநீதி நடை பெறும் போது அதனைத்தட் டிக் கேட்கும் உரிமை பத்திரிகை களுக்கும் சமூக அக்கறை கொண்ட அனைவருக்கும் உள்ள கடமையும் உரிமையுமாகும். இதேவேளை பத்திரிகைகள் அதன் உண்மைத தன்மைகளை சந்தேகத்திற்கு இடமின்றி உறுதி செய்து கொள்வதும் ஆதாரப்படுத்தக் கூடியதாக வெளிப்படுத்துவதும் எதிர்காலத்தில் முரண்பாடு களைத் தவிர்த்துக் கொள்வதற்கும் சமூக அநீதிகளைக் கட்டுப்படுத்து வதற்கும் சாலப் பொருத்தமானதாக அமையும் என நாம் கருதுகிறோம்.

சமூக அநீதிகளை நாம் கண்மூடி மௌனிகளாக நின்று அனுமதிக் கப்போவதில்லை. அவற்றை எமது சமூகத்தில் இருந்து விரட்டியடிக்க நடை முறைச் சாத்தியமான செயற்திறன் மிக்க கலந்துரையாடல்களையும் கருத்துப் பரிமாற்றஙகளையும் மேற்கொண்டு பிரச்சினைகளை எதிர்காலத்தில் தீர்க்க முனைவது ஒவ்வொருவரினதும் கடமை யாகும்.

தமிழினம் பெரும் விலை கொடுத்து தனது விடுதலைப் பயணத்தில் வீச்சுடனும் உறுதியுடனும் நிதானமாக முன்னேறிவரும் இச்சூழலில் அனைவரும் ஒன்றுபட்டு எமது தேசத் தினதும் எமது இனத்தினதும் எதிர்காலத்தினை தீர்மானிக்கும் விடு தலைப் பயணத்தில் இணைந்து பலம் சேர்க்க வேண்டும்அதேநேரம் அனை வரும் ஒன்றிணைந்து நிற்க வேண் டிய இக்கட்டத்தில் எமது இனத்தினை பலவீனப்படுத்த முனையும பிரித்தாளும் தந்திரோபாய உத்திகளைக் கொண்டிருக்கும் சக்திகளுக்கு இடம் கொடுக்காமல் சமூக நிதியும் மனித நேயமும் கொண்ட சமூகத்தினை உருவாக்கும் பணியில் ஒன்றிணைந்து செயற்படு வோம் எனக் கேட்டுக் கொள்கின றோம்என் றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.


## பதவி வெற்றிடம்

பிரதேச செய்தியாளர்கள் (ஆண்கள்)

பின்வரும் பிரதேசங்களில் வெற்றிடங்களை நிரப்பவும், மேலதிகமாகவும் செய்தியாளர்கள் நியமிக்கப்படவுள்ளனர்.

| | |
|---|---|
| நீராவியடி | தெல்லிப்பழை |
| கொக்குவில்-கிழக்கு | அளவெட்டி |
| கொக்குவில்-மேற்கு | பண்டத்தரிப்பு |
| கோண்டாவில்-கிழக்கு | மாதகல் |
| கோண்டாவில்-மேற்கு | இளவாலை |
| உரும்பிராய் | சில்லாலை |
| ஊரெழு | நாவாந்துறை |
| அச்செழு | கொட்டடி |
| புன்னாலைக்கட்டுவன்-தெற்கு | குருநகர் |
| புன்னாலைக்கட்டுவன்-வடக்கு | பாசையூர் |
| தாவடி | கொழும்புத்துறை |
| இணுவில் | அரியாலை |
| மருதனார்மடம் | நல்லூர் |
| சுன்னாகம் | |

தகைமை - க.பொ.த (சாதாரணம்) சித்தி

தகுதியும், ஆர்வமும் உடையவர்கள் முழுப்பெயர், நிரந்தர முகவரி, தற்காலிக முகவரி, பிறந்த திகதி, தே.அ.அ.இல, கி.சே.பிரிவு, பி.செ.பிரிவு, குடியியல் தகைமை, கல்வித் தகைமை, தொழில் புரிபவராயின் தொழிலின் தன்மை, தொழில் புரியும் திணைக்களம், இடம், மேலதிகத் தகைமை ஆகியன உள்ளிட்டதாகத் தயாரிக்கப்பட்ட விண்ணப்பங்களை

ஆளணி முகாமையாளர்
வலம்புரி
15, வெள்ளாந்தெரு,
யாழ்ப்பாணம்

எனும் முகவரிக்கு 10.02.2003 ற்கு முன்னதாக அனுப்பி வைக்கவும். கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் "பிரதேச செய்தியாளர் பதவிக்கான விண்ணப்பம்" எனத் தவறாது குறிப்பிடவும்

வலம்புரி ஆளணி முகாமையாளர்



## யாழ்ப்பாணம் - மாநகரசபை.

### கேள்வி அறிவித்தல்

கீழ்க்காணும் இறைச்சிக்கடையை 01.02.2003 முதல் 31.12.2003 வரையான காலப்பகுதிக்கு குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

| | |
|---|---|
| கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி | 31.01.2003ந் திகதி வெள்ளிக்கிழமை மு.ப 10.00 மணிவரை. |
| கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி | 31.01.2003ந் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.00 மணிவரை. |
| கேள்விகள் திறக்கும் திகதி | 31.01.2003ந் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு. |

### விபரம்

| | கேள்விப் பிணைப்பணம் | நிர்ணயித்த ஆகக் குறைந்த கேள்வித் தொகை (வற் நீங்கலாக) |
|---|---|---|
| புங்கன்குளம் ஆட்டிறைச்சிக் கடை (புங்கன்குளம் சந்தையில் கடையை குத்தகைக்காரரே அமைத்தல் வேண்டும்) | 2500.00 | 16500.00 |

மேற்படி கேள்வியில் சித்தி பெறும் கேள்விக்காரர் 31.01.2003ந் திகதி குத்தகைப் பணத்தைச் செலுத்தி உடன்படிக்கை செய்ய தயாராக இருத்தல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்

மாநகரசபை அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
2003.01.27 (C/5718)

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.



# COTTON SHIRT

ரூபா 275/=

வெப்ப காலத்திற்கேற்ற பருத்தி ஆடைகள்
விரும்பிய வர்ணங்களில்
தேவையான அளவுகளில்
உங்கள் விருப்பத்திற்கு ஏற்ப
தெரிவு செய்ய வாருங்கள்

வேம்படிச்சந்தி,
ஆஸ்பத்திரி வீதி,
(இலங்கை வங்கி அருகில்)
யாழ்ப்பாணம். (C/5717)



## இந்திய ஜோதிடர் யாழ். விஜயம்

ஸ்ரீ சோடாநிகரை பகவதி அம்மன் அருள் பெற்று ஸ்ரீ வெட்டுடைய காளி அம்மன் வாக்குப்பெற்ற இந்திய பரம்பரை ஜோதிடர் யாழ்.வருகை தந்துள்ளார். கைரேகை, ஜாதகம், எண்கணிதம், மகப்பேறு, குடும்பப் பிரச்சினையா? கல்வி, வெளிநாடு செல்லத் தடையா? தொழிற் பிரச்சினையா? காதல் பிரச்சினையா? திருமணப் பிரச்சினையா? தீராத நோயா? எவ்வித பிரச்சினைகளுக்கும் தக்கபரிகாரம் மூலம் தீர்வுகாணலாம்.

ஒருமுறை விஜயம் செய்து பாருங்கள்.

மணிசாமி. P.T.R .
பாண்டீஸ்வரி அம்பாள் அம்மா
யாழ். உல்லாசப் பயணிகள் விடுதி,
இல. 54, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம் (வெலிங்டன் சந்தி அருகில்)
பார்வையிடும் நேரம் : காலை 9 மணி முதல் மாலை 4.00 மணிவரை.

[C/5522]


இப் பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 28.01.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.